لُمْعَةُ الِاعْتِقَادِ الْهَادِي إِلَى سَبِيلِ الرَّشَادِ

للإمام ابن قُدامَةَ الْـمَقْدِسِي رحمه الله

அல்ஹாதீ இலா ஸபீலிர் ரஷாத் லும்அத்துல் இஃத்திகாத்

நேரான பாதைக்கு நேர்வழி காட்டும் வெளிச்சமிக்க நம்பிக்கைகள்



ஆசிரியர் :

இப்னு குதாமா அல்மக்திஸி

ரஹிமஹுல்லாஹ்

தமிழில்:

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

குர்ஆன், சுன்னா பணியாளர்

DARUL HUDA

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

لُمْعَةُ ٱلِاعْتِقَادِ الْهَادِي إِلَىٰ سَبِيلِ الرَّشَادِ

للإمام ابن قُدامَةَ الْمَقْدِسِي رحمه الله

லும்அத்துல் இஃத்திகாத் அல்ஹாதீ இலா ஸபீலிர் ரஷாத்

நேரான பாதைக்கு வழிகாட்டும் வெளிச்சமிக்க நம்பிக்கைகள்

பலவீனமான அறிவிப்புகள் நீக்கப்பட்ட,
மூல ஆதாரங்கள் உறுதி செய்யப்பட்ட பதிப்பு.

ஆசிரியர்

அப்துல்லாஹ் இப்னு அஹ்மது இப்னு குதாமா அல்மக்திஸி
ரஹிமஹுல்லாஹ்

தமிழில்

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்
குர்ஆன், சுன்னா பணியாளர்

About This Book

Name of the Book	:	நேரான பாதைக்கு வழிகாட்டும் வெளிச்சமிக்க நம்பிக்கைகள்
Name in English	:	Lumathul Ithikkaad alhaadhi ila sabeelur Rashaad
Name in Arabic	:	لُمْعَةُ ٱلِاعْتِقَادِ الْهَادِي إِلَى سَبِيلِ الرَّشَادِ
Translator	:	**OMAR SHERIFF ABDUS SALAM**
Language	:	Tamil
Date of Publication	:	June 2020
Edition	:	1st, June 2020.
Total Pages	:	80
Copies	:	2000
Ref. No.	:	DH-TML 2064
Printed by	:	Patel Graphics, Chennai - 6.

HADIYAH: RS. 50/-

Published by:

DARUL HUDA

Quality Islamic Book Publishers

211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-600001.

Phone : +91-44-25247866, | darulhuda.chennai@gmail.com

Mobile : +91-98401 74121 | www.darulhuda.net

உள்ளே...

பதிப்புரை

அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் நன்றிகளும்! ஸலவாத்தும் ஸலாமும் நமது தூதர் மீதும் மற்றும் அவர்களின் குடும்பத்தார்கள், தோழர்கள் மீதும் நிலவட்டும்.

அஹ்லுஸ் ஸுன்னாவின் தெளிவான, சரியான கொள்கை நூல்களை தமிழ் உலகிற்கு கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தில் இந்நூலை வெளியிடுகின்றோம்.

இன்னும் பெரிய இமாம்களின் நூல்களை தொடர்ந்து வெளியிட அல்லாஹ் உதவி செய்வானாக!

தன்னை ஸலஃபி என்று அல்லது ஸலஃப் மன்ஹஜை பின்பற்றுபவர் என்று யாராவது கூறினால், அவர் அல்லாஹ்வின் ஃஸிபாத் - தன்மைகள் விஷயத்தில் வழிகேடான கொள்கைகளை கூறுபவர் என்று இன்று தங்களைத் தாங்களே அஹ்லுஸ் சுன்னத் வல்ஜமாஅத் என்று கூறிக்கொள்பவர்கள் பொய் பிரச்சாரம் செய்கின்றார்கள்.

நமது நான்கு இமாம்களும் அவர்களின் நல்வழியில் வந்த நல்லோரும் இந்த ஸலஃப் மன்ஹஜைத்தான் கொள்கை விஷயத்தில் பின்பற்றி வந்தார்கள்.

அல்லாஹ்வின் தன்மைகளில் அவர்கள் எந்த தன்மைக்கும் மாற்றுப் பொருள் கூறவோ அதை மறுக்கவோ, ஒப்பிடவோ,

DARUL HUDA | WhatsApp +919884469044
darulhuda.chennai@gmail.com

அதற்கு சுய அறிவைக் கொண்டு விளக்கம் கூறவோ செய்யவில்லை.

அதைத்தான் இன்று நாம் மக்களுக்கு போதிக்கிறோம். அதன் பக்கமே நாம் மக்களை அழைக்கின்றோம். அல்லாஹ்வின் அருளால் இறுதி மூச்சுவரை நாம் அதன் பக்கம் அழைத்துக் கொண்டே இருப்போம் இன் ஷா அல்லாஹ்..

இந்த கொள்கை இப்னு தைமிய்யாவின் சிந்தனையில் உருவானது அல்ல. இந்த நூலின் ஆசிரியர் இப்னு தைமிய்யாவை முந்தியவர் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த கொள்கை குர்ஆன் கூறும் கொள்கை. இது நபி ﷺ அவர்கள் கற்பித்த கொள்கை. இது நபித்தோழர்கள் நம்பியிருந்த விளங்கியிருந்த கொள்கை. இன்னும் அவர்களின் வழியில் வந்த சான்றோர் உடைய கொள்கை ஆகும்.

ஆகவே, இந்த நூலை தெளிவாக படியுங்கள்! புரியுங்கள்!! உண்மையான அஹ்லுஸ் ஸுன்னா உடைய கொள்கையை ஏற்று வெற்றி பெறுங்கள்! அல்லாஹ் அதற்கு உங்களுக்கும் எனக்கும் அருள் புரிவானாக! ஆமீன்!!

அல்லாஹ்வின் அழகிய தன்மைகளை ஏற்று, அவற்றை நம்புவதில் உள்ளத்திற்கு கிடைக்கும் மகிழ்ச்சி, நற்பாக்கியம் வேறு எதிலும் கிடைக்குமா?

அல்லாஹ் தனக்கு கூறிய தன்மைகளை மறுப்பதைவிட அல்லது அவற்றுக்கு மாற்றுக் கருத்தை கூறுவதை விட வழிகேடு வேறு என்ன இருக்க முடியும்?

அல்லாஹ் இந்நூலை ஏற்றுக் கொள்வானாக! எங்களை

மன்னிப்பானாக! இன்னும் அதிகம் அதிகம் நல்ல நூல்களை வெளியிட அருள் புரிவானாக! ஆமீன்.

நிச்சயமாக அவன்தான் எங்கள் இலாஹ், எங்கள் ரப்பு, அவன் நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன், பாவங்களை மன்னிப்பவன், மகா கருணையாளன் ஆவான்.

உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

குர்ஆன், ஸுன்னா பணியாளர்

தாருல் ஹுதா
அறிமுகம்

எல்லாப் புகழும் அகிலங்களின் இறைவன் அல்லாஹ் ஒருவனுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது ﷺ அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவருக்கும் உண்டாகட்டும்.

இஸ்லாமியச் சகோதர சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

தாருல் ஹுதா அறிமுகத்தின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். இதில் தாருல் ஹுதாவின் நோக்கத்தையும் அதன் பணிகளையும் விவரிப்பதுடன் அதன் இன்றைய தேவையையும் தங்கள் முன் சமர்ப்பிக்கிறோம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்: "இறை நம்பிக்கையுடைய ஆண்களும், இறை நம்பிக்கையுடைய பெண்களும் (தங்களுக்குள்) ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்கின்றனர். அவர்கள், (ஒருவர் மற்றவரை) நன்மை செய்யும்படித் தூண்டியும், பாவம் செய்யாது தடுத்தும், தொழுகையைக் கடைப்பிடித்து, (மார்க்க வரி) ஜகாத்து கொடுத்தும் வருவார்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பார்கள். இத்தகை யோருக்கு வெகு விரைவில் அல்லாஹ் அருள்புரிவான்..."

(அல்குர்ஆன் 9:71)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்: (நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் மனிதர்களைச் சிறந்ததின் பக்கம் அழைத்து, நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களில் இருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கட்டும். இத்தகையவர்கள்தாம் வெற்றியாளர்கள். (அல்குர்ஆன் 3:104)

நபி ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: உங்களில் யாராவது ஒரு தவறைக் கண்டால் அதை தனது கரத்தால் மாற்றட்டும். அது இயலாவிட்டால் தனது நாவால் மாற்றட்டும். அதுவும் இயலாவிட்டால் உள்ளத்தால் (வெறுத்து விலகி விடட்டும்). இது ஈமானின் குறைந்தபட்ச அளவாகும்.

(ஸஹீஹுல் புகாரி)

மேலும் நபி ﷺ கூறுகிறார்கள்: இறைநம்பிக்கையாளர்கள் தங்களிடையே நேசங்கொள்வதற்கும், கருணை காட்டுவதற்கும், அன்பு செலுத்துவதற்கும் உதாரணம் ஓர் உடலைப் போல! உடலில் ஏதேனும் ஓர் உறுப்பு பாதிக்கப்பட்டால் அனைத்து உறுப்புகளும் காய்ச்சல் மற்றும் தூக்கமின்மையால் முறையிடுகின்றன. **(ஸஹீஹுல் புகாரி)**

இன்று நமது சமுதாயத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை பெரும்பாலோர் சரியான மார்க்க ஞானத்திற்கும் முறையான வழிகாட்டலுக்கும் அதிகம் தேவையுள்ளவர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனங்கள் மற்றும் நபிமொழிகளுக்கிணங்க சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவது மார்க்கக் கடமை என்பதை உணர்ந்து, அல்குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையில் அந்த உயர்ந்த பணியை நிறைவேற்றி இறைப்பொருத்தத்தை அடைய வேண்டும் என்ற தூய எண்ணத்தில் தொடங்கப்பட்டதுதான் **தாருல் ஹுதா.**

பணிகளும் தொண்டுகளும்:

அழைத்தல்:

இதுவே இஸ்லாமின் அடிப்படையாகும். உலகில் இப்பணி இறைத் தூதர்கள் வாயிலாக நிலை நிறுத்தப்பட்டது. இறுதித் தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்குப் பின் அவர்களுடைய சமுதாயத்தினர் அனைவரின் மீதும் இப்பணி கடமையாக்கப்பட்டது. மேன்மைமிகு குர்ஆனும், சிறப்புமிகு நபி மொழியும் இதன் அவசியத்தை நமக்கு வலியுறுத்துகின்றன. இதற்கிணங்க இயன்ற அளவு அனைத்து வழிகளிலும் மனித சமுதாயத்திற்கு இஸ்லாமை அறிமுகப்படுத்துவதும், அதன் உயர்வுகளை விளங்கச் செய்வதும் தாருல் ஹுதாவின் தலையாயப் பணியாகும்.

கற்பித்தல்:

இஸ்லாமை அறிய விரும்பும் சிறுவர்கள், வாலிபர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் மேன்மைமிகு குர்ஆன்,

சிறப்புமிகு நபிமொழிகளை அவரவர் தகுதிக்கேற்ப கற்றுத் தருவது தாருல் ஹுதாவின் இரண்டாவது முக்கிய பணியாகும்.

நூல் வெளியிடுதல்:

மேன்மைமிகு குர்ஆன், சிறப்புமிகு நபிமொழி இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டு சமுதாயப் பேரறிஞர்களால் அரபி மொழியில் எழுதப்பட்ட நூல்களை தமிழிலும் ஏனைய உலக மொழிகளிலும் மொழியாக்கம் செய்து, அந்நூற்களைச் சலுகை விலையில் மக்களுக்கு வழங்குவது தாருல் ஹுதாவின் மூன்றாவது சிறப்புப் பணியாகும்.

உதவுதல்:

அல்லாஹு தஆலாவே அனைவரின் தேவைகள், துன்பங்கள் அனைத்தையும் நிவர்த்தி செய்பவன். மிகப்பெரிய வள்ளலாகிய அல்லாஹ் தன் சார்பாக உலகில் ஏழை, எளியோர், நலிந்தோர் ஆகியோரின் துயர் துடைக்கும் வள்ளல் பெருமக்களுக்கு பெரும் வெகுமதிகளை ஈருலகிலும் வழங்குவதாக வாக்களித்துள்ளான். பிறர் துன்பங்களில் பங்கெடுப்பது, பிறர் தேவைகளை நிறைவேற்ற இயன்ற வரை உதவுவது முஸ்லிம்களுடைய அடிப்படைப் பண்புகளாகும். இவ்வுன்னதப் பணிக்காக **பைத்துல்மால்** (பொது நிதி) ஏற்பாடு செய்து இரக்கச் சிந்தையும், மார்க்கப்பற்றும் கொண்ட வள்ளல் பெருமக்களிடமிருந்து கடமையான, உபரியான தர்மங்களைப் பெற்று தேவையுடையோருக்கு உதவுதல் தாருல் ஹுதாவின் நான்காவது பணியாகும்.

மேற்கூறிய பணிகளைத் தவிர, இஸ்லாம் முழுமையாக ஒவ்வொருவரின் வாழ்விலும் வரவேண்டும் என்பதற்காகவும், மனிதச் சமுதாயங்களுக்குள் நல்லுறவும், அன்பும், கருணையும், சமூக புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் இயன்றவரை அல்லாஹ்வுக்காக தொண்டாற்ற வேண்டும் என்பது தாருல் ஹுதாவின் குறிக்கோளாகும்.

இப்பணிகள் அனைத்தும் தொய்வின்றி தொடர்ந்து சிறப்பாக, திறம்பட நடைபெறவும், அவற்றை அல்லாஹ் அங்கீகரிக்கவும் தாங்கள் துஆ செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்வதுடன் தங்களால் இயன்றவரை இப்பணிகளில் பங்கு பெறவும் அழைக்கிறோம்.

பேராற்றலுடைய அல்லாஹ்விடமே உதவி தேடுகிறோம்! அவனையே முன்னோக்கி நிற்கிறோம்!!

DARUL HUDA | WhatsApp +919884469044 darulhuda.chennai@gmail.com

உங்களால் முடிந்த உதவிகளை அல்லாஹ்வின் பொருத்தம் நாடி தந்துதவுங்கள்.

> ***நன்மையான காரியங்களில் எவற்றை நீங்கள் உங்களுக்காக (மரணம் வருவதற்கு) முன்னதாகவே செய்து கொள்கிறீர்களோ அவற்றை அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்ததாகவும், மகத்தான கூலியாகவும் பெற்றுக் கொள்வீர்கள்.*** *(அல்குர்ஆன் 73:20)*

அல்லாஹ் தங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

ஆசிரியர் அறிமுகம்

موفق الدين أبو محمد عبد الله بن أحمد بن قدامة بن مقدام، العدوي، القرشي، المقدسي، الجمّاعيلي، ثم الدمشقي، الصالحي أحد أئمة وشيوخ المذهب الحنبلي

இவரின் பெயர்: முவஃப்ஃபக்குத்தீன் அபூ முஹம்மத் அப்துல்லாஹ் இப்னு அஹ்மது இப்னு குதாமா இப்னு மிக்தாம் அல்அதவி, அல்குரஷி, அல்மக்திஸி

இவர் ஹிஜ்ரி 541 பாலஸ்த்தீனத்தில் உள்ள நாபுளுஸ் தாளுக்கில் ஜம்மாயீல் என்ற ஊரில் பிறந்தார்.

சிறுவயதில் குர்ஆனை மனனம் செய்துவிட்டு, ஹதீஸ் மற்றும் ஃபிக்ஹ் கல்விகளை படிக்க பல இடங்களுக்கு பயணம் மேற்கொண்டார்.

இராக்கில் பாக்தாத் நகரில் இப்னுல் ஜவ்ஸி,[1] அப்துல் காதிர் ஜீலானி,[2] மற்றும் அக்காலத்தில் அங்கிருந்த பெரிய அறிஞர்களிடத்திலும் கல்வி பயின்றார்.

---

1. அபுல் ஃபரஜ் அப்துர் ரஹ்மான் இப்னு அபில் ஹஸன் அலீ இப்னு முஹம்மத் அல் குறஷீ. பிறப்பு: ஹிஜ்ரி 510, இறப்பு ஹிஜ்ரி 597. ஃபிக்ஹ், ஹதீஸ் மற்றும் வரலாற்றுக் கலைகளில் அறிஞராகத் திகழ்ந்தார்.
2. பெயர்: அபூ முஹம்மத் அப்துல் காதிர் இப்னு மூஸா இப்னு அப்தில்லாஹ். பிறப்பு ஹிஜ்ரி 470, இறப்பு ஹிஜ்ரி 561. ஃபிக்ஹ் கலையின் அறிஞராகவும் மக்களுக்கு உபதேசம் செய்யும் சீர்திருத்தவாதியாகவும் இருந்தார்.

ஹன்பலி மத்ஹபுக்கு பெரும் தொண்டாற்றி இருக்கின்றார்கள். பல சட்ட நூல்களை எழுதியுள்ளார்கள். அவை இன்று வரை மூல ஆதாரங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சுல்தான் சலாஹுத்தீன் அய்யூபி ﷺ அவர்கள் பாலஸ்தீனை விடுவிக்க ஏற்பாடு செய்த போரில் இவரும் கலந்து கொண்டார். பல நகரங்களை வெற்றிக் கொள்வதிலும் இறுதியாக பைத்துல் முகத்தஸை வெற்றிக் கொண்டதிலும் ஷைக் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

வாழ்நாளை கல்விப் பணியிலும் ஜிஹாதிலும் ஷைக் அவர்கள் கழித்தார்கள்.

இறுதியில் ஹிஜ்ரி 620 நோன்பு பெருநாள் அன்று இவ்வுலகை பிரிந்தார்கள். திமஷ்க் நகரத்தில் மகாரத் தவ்பா என்ற மக்பராவில் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

அவரைப் பற்றி அறிஞர்களின் கூற்றுகள்:

அபூ அம்ர் இப்னுஸ் ஸலாஹ்[3] ﷺ கூறுகிறார்: நான் ஷைக் முவஃப்ஃபக்கைப் போன்று பார்த்ததில்லை.

இப்னு தைமிய்யா[4] ﷺ கூறுகிறார்: இமாம் அவ்சாயிக்குப் பிறகு ஷாம் நகரத்தில் ஷைக் முவஃப்ஃபக் அவர்களை விட மார்க்க சட்டங்களை அறிந்த அறிஞர் யாரும் நுழைந்ததில்லை.

இப்னு ரஜப் ஹன்பலி[5] ﷺ கூறுகிறார்: ஷைக் முவஃப்ஃபக் ﷺ

---

3. பெயர் உதுமான் இப்னு அல் முஃப்தி ஸலாஹுத்தீன் இப்னு அப்திர் ரஹ்மான். பிறப்பு ஹிஜ்ரி 577, இறப்பு ஹிஜ்ரி 643. ஹதீஸ் மற்றும் ஃபிக்ஹ் கலையின் அறிஞராகத் திகழ்ந்தார்.
4. பெயர் அபுல் அப்பாஸ் அஹமது இப்னு அப்துல் ஹலீம் இப்னு அப்துஸ் ஸலாம். பிறப்பு ஹிஜ்ரி 661, இறப்பு ஹிஜ்ரி 728. ஃபிக்ஹ், கொள்கை மற்றும் ஹதீஸ் கலைகளின் அறிஞராகத் திகழ்ந்தார்.
5. ஸைனுத்தீன் அப்துர் ரஹ்மான் இப்னு அஹ்மது இப்னு அப்துர் ரஹ்மான். பிறப்பு ஹிஜ்ரி 736, இறப்பு ஹிஜ்ரி 795. ஹதீஸ் மற்றும் ஃபிக்ஹ் கலையின் அறிஞராகத் திகழ்ந்தார்.

அவர்கள் மார்க்க சட்ட அறிஞர், உலகப் பற்றற்றவர், இமாம், இஸ்லாமிய அறிஞர், பெரும் கல்விமான்களில் ஒருவர், அக்கால இமாம்களுக்கு இமாம், இந்த உம்மத்தின் முஃஃப்தி, அல்லாஹ் அவருக்கு விசேஷமான சிறப்புகளையும் ஞானங்களையும் கொடுத்திருந்தான், அவரின் நற்புகழ் நகரங்கள் எல்லாம் பரவி உள்ளன, அவர் போன்றவர் காலங்களில் மிகக் குறைவாகத்தான் பிறக்கின்றார்கள்.

இமாம் தஹபி[6] ﷬ கூறுவதாவது: ஷைக் முவஃஃப்ஃஃபக் அவர்கள் கல்விக் கடல்களில் ஒருவர், உலக நுண்ணறிவாளர்களில் ஒருவர் ஆவார்.

இப்னு கஸீர்[7] ﷬ கூறுகிறார்: அவர் ஓர் இமாம், மார்க்க அறிஞர், திறமையானவர், அவரின் காலத்திலும் அதற்கு சிறிது காலத்திற்கு முன்னரும் அவரைவிட மார்க்க சட்ட அறிஞர் யாரும் இருக்கவில்லை.

வாரிசுரிமை சட்டங்கள், உஸூல், ஃபிக்ஹ், நஹ்வு, கணக்கு, நட்சத்திரங்கள், அதன் தங்குமிடங்கள் என பலதரப்பட்ட கல்விகளில் நன்கு ஆழமான ஞானமுள்ளவராக திகழ்ந்தார். மார்க்க சட்டங்களில் இஜ்திஹாத் - சுயமாக ஆய்வு செய்து சட்டம் எடுக்கும் அளவிற்கு திறமை உள்ளவராக இருந்தார்.

அவர்கள் எழுதிய நூல்கள்:

1). **عمدة الفقه**

உம்தத்துல் ஃபிக்ஹ்

---

6. பெயர்: ஷம்சுத்தீன் முஹம்மது இப்னு அஹமது இப்னு உஸ்மான். பிறப்பு ஹிஜ்ரி 673, இறப்பு ஹிஜ்ரி 748. அல்குர்ஆன், ஹதீஸ், வரலாறு போன்ற துறைகளில் பேரறிஞராகத் திகழ்ந்தார்.
7. இவரது பெயர் இமாதுத்தீன் அபுல் ஃபிதா இஸ்மாயீல் இப்னு உமர் இப்னு கஸீர் அல் குறஷி. பிறப்பு ஹிஜ்ரி 701, இறப்பு ஹிஜ்ரி 774. ஹதீஸ், ஃபிக்ஹ், தஃப்ஸீர் மற்றும் வரலாற்றுக் கலைகளின் பேரறிஞராகத் திகழ்ந்தார்.

2). المقنع
அல்முக்னிஃ

3). الكافي في فقه الإمام أحمد بن حنبل
அல்காஃபி ஃபீ ஃபிக்ஹில் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல்

4). المغني
அல்முக்னி

5). الاستبصار في الأنساب
அல்இஸ்திப்ஸார் ஃபில் அன்ஸாப்

6). الاعتقاد
அல்இஃதிகாத்

7). ذم التأويل
தம்முத் தஃவீல்

8). ذم الوسواس
தம்முல் வஸ்வாஸ்

9). روضة الناظر وجنة المناظر
ரவ்ழத்துன் நாளிர் வஜன்னத்துல் மனாளிர்

10). فضائل الصحابة
ஃபழாயிலுஸ் ஸாஹாபா

11). القدر
அல்கதர்

12). مسألة في تحريم النظر في علم الكلام
மஸ்அலத்துன் ஃபீதஹ்ரீமின் நளர் ஃபீ இல்மில் கலாம்

13). مناسك الحج
மனாசிக்குல் ஹஜ்ஜ்

14). التبيين في أنساب القرشيين
அத்தப்யீன் ஃபீ அன்சாபில் குர்ஷிய்யீன்

15). تحريم النظر في كتب أهل الكتاب
தஹ்ரீமுன் நள்ர் ஃபீ குதுபி அஹ்லில் கிதாப்

16). البرهان في مسألة القرآن
அல்புர்ஹான் ஃபீ மஸ்அலத்தில் குர்ஆன்

17). ذم ما عليه مدعو التصوف
தம்மு மா அலைஹி முத்தவுத் தஸவ்வுஃப்

18). رسالة إلى فخر الدين ابن تيمية في عدم تخليد أهل البدع في النار
ரிஸாலா இலா ஃபக்ருத்தீன் இப்னு தைமிய்யா

19). كتاب التوابين
கிதாபுத் தவ்வாபீன்

20). الرقة والبكاء
அர்ரிக்கத்து வல் புகா

21). فضائل عاشوراء
ஃபழாயிலு ஆஷூரா

22). فضائل العشر
ஃபழாயிலுல் அஷ்ர்

23). الفوائد
அல்ஃபாவாயித்

24). صفة العلو - لله الواحد القهار
ஸிபத்துல் உலுவ் லில்லாஹ் அல்வாஹிதில் கஹ்ஹார்

25). القدر
அல்கதர்

26). قنعة الأريب في الغريب
கன்அத்துல் அரீப் ஃபில் கரீப்

27). المتحابون في الله
அல்முதஹாப்பூன ஃபில்லாஹ்

28). مختصر علل الحديث
முக்தசரு இலலில் ஹதீஸ்

29). مختصر الهداية
முக்தசரு அல்ஹிதாயா

30). الكفر والتوحيد
அல்குஃப்ர் வத்தவ்ஹீத்

31). مشيخة شيوخه
மஷீகத்து ஷுயூகிஹி

32). الوصية
அல்வஸிய்யா

33). لمعة الاعتقاد الهادي إلى سبيل الرشاد
லும்அத்துல் இஃத்திகாத்

ஷைக் அவர்கள் எழுதிய நூல்கள் மூலம் அல்லாஹ் நமக்கு நற்பலனளிப்பானாக! அவர்களின் கல்வியை தமிழ் பேசும் மக்களுக்கும் மொழியாக்கம் செய்து வெளியிட எங்களுக்கு அருள் புரிவானாக! ஆமீன்.

பாடம் 1

لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ

அல்லாஹ்விற்கு ஒப்பானவர் ஒருவருமில்லை

அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் உரியது. எல்லோருடைய நாவுகளினாலும் அவன் புகழப்படுகின்றான். எல்லாக் காலங்களிலும் அவன் மட்டுமே வணங்கப்படுகின்றான். அவனுடைய அறிவை விட்டும் எந்த இடமும் நீங்கிவிட முடியாது. ஒன்றை கவனிப்பதால் மற்றொன்று அவனுக்கு தவறி விடாது. அவனுக்கு ஒப்பானவைகள், நிகரானவைகள் இருக்க முடியாத அளவிற்கு அவன் மிக மிக கம்பீரமானவன், கண்ணியமானவன். அவனுக்கு மனைவி இருப்பதை விட்டும் குழந்தைகள் இருப்பதை விட்டும் அவன் பரிசுத்தமானவன். அடியார்கள் அனைவரிலும் அவனுடைய அதிகாரம்தான் செல்லுபடியாகும். அறிவுகள் சிந்தித்து அவனுக்கு உவமைகள் கூறிவிட முடியாது. உள்ளங்கள் கற்பனை செய்து தமது கற்பனையால் அவனுக்கு ஓர் உருவத்தை கற்பனை செய்துவிட முடியாது.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ

அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. அவன் (அனைத்தையும்)

செவியுறுபவன், உற்று நோக்குபவன் ஆவான்.

(அல்குர்ஆன் 42 : 11)

அவனுக்கு அழகிய பெயர்களும் மிக உயர்வான பண்புகளும் உள்ளன.

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

الرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوٰى ○ لَهُ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ وَمَا بَيْنَهُمَا وَمَا تَحْتَ الثَّرٰى ○ وَإِنْ تَجْهَرْ بِالْقَوْلِ فَإِنَّهُ يَعْلَمُ السِّرَّ وَأَخْفٰى ○

(அவற்றைப் படைத்த) ரஹ்மான் (-அளவற்ற அருளாளனாகிய அல்லாஹ்) அர்ஷின் மீது (தன் மகிமைக்குத் தக்கவாறு) உயர்ந்து விட்டான். வானங்களிலும், பூமியிலும், இவற்றுக்கு மத்தியிலும், இன்னும் பூமிக்குக் கீழ் புதைந்து கிடப்பவையும் அவனுக்கே சொந்தமானவை. (நபியே!) நீர் (மெதுவாக அல்லது) சப்தமிட்டு கூறினால் (இரண்டும் அவனுக்குச் சமம்தான். ஏனென்றால்,) நிச்சயமாக அவன் இரகசியத்தையும் அதைவிட மிக மறைவாக (மனதில்) இருப்பதையும் நன்கறிவான்.

(அல்குர்ஆன் 20 : 5, 6, 7)

அவன் ஒவ்வொரு வஸ்த்துவையும் தனது அறிவால் சூழ்ந்து இருக்கின்றான். இன்னும், ஒவ்வொரு படைப்பையும் அவன் கண்ணியத்தாலும் அதிகாரத்தாலும் அடக்கி ஆளுகின்றான். இன்னும், ஒவ்வொரு வஸ்த்துவையும் அவன் கருணையாலும் அறிவாலும் விசாலமாகி இருக்கின்றான். (அதாவது, அவனுடைய கருணையும் அறிவும் படைப்புகள் அனைத்தையும் வியாபித்து இருக்கின்றன.)

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ وَلَا يُحِيطُونَ بِهِ عِلْمًا ○

அவர்களுக்கு முன்னுள்ளதையும் பின்னுள்ளதையும் அவன் நன்கறிவான். எனினும், அவர்கள் அவனை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. (அல்குர்ஆன் 20 : 110)

அவன் தன்னை தனது மகத்தான வேதத்தில் எப்படி வர்ணித்து இருக்கின்றானோ, மேலும் அவனுடைய கண்ணியமான தூதர் ﷺ அவர்கள் அவனை எப்படி வர்ணித்தார்களோ அப்படித்தான் அவன் வர்ணிக்கப்பட வேண்டும்.

ரஹ்மானின் பண்புகள் என்று குர்ஆனில் எதுவெல்லாம் வந்துள்ளதோ, இன்னும் நபி முஸ்தஃபா ﷺ அவர்கள் புறத்திலிருந்து ஸஹீஹான ஹதீஸ்களில் எதுவெல்லாம் வந்துள்ளதோ அவை அனைத்தையும் ஈமான் -நம்பிக்கை கொள்ள வேண்டும். அவை அனைத்தையும் முற்றிலும் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்கீகரிக்க வேண்டும். அவற்றை மறுப்பதோ, அல்லது அவற்றுக்கு மாற்று கருத்து கூறுவதோ, அல்லது அவற்றுக்கு உவமை கூறுவதோ, அல்லது அவற்றை படைப்பினங்களின் தன்மைக்கு ஒப்பாக்குவதோ கூடாது.[1]

எது நமக்கு புரியவில்லையோ அதன் வார்த்தையில் உள்ளபடி அதை ஏற்றுக் கொண்டு, அதனுடைய பொருளில் எந்த விதமான குளறுபடியும் செய்யாமல் அதன் உண்மையான அறிவை அதை கூறியவனிடமே (-அல்லாஹ் இன்னும் அவனுடைய தூதரிடமே) நாம் திருப்பிவிட வேண்டும். அந்த வசனங்களை அல்லது நபிமொழிகளை நம் வரை யார் கொண்டு

1. மறுப்பதற்கு الرد ரத்து அல்லது تعطيل என்றும் மாற்று கருத்து கூறுவதற்கு تأويل தஃவீல் என்றும், உவமை கூறுவதற்கு تمثيل தம்ஸீல் என்றும், ஒப்பாக்குவதற்கு تشبيه தஷ்பீஹ் என்றும் கூறப்படும்.

வந்து சேர்த்தார்களோ அவர்கள் அதற்கு பொறுப்பேற்பார்கள். இதுதான் கல்வியில் ஆழமானவர்களின் வழிமுறையாகும். அதைத்தான் நாமும் பின்பற்ற வேண்டும். இவர்களைத்தான் அல்லாஹ் ஸுப்ஹானஹு வதஆலா தனது தெளிவான வேதத்தில் புகழ்ந்து கூறுகின்றான்:

وَالرَّاسِخُونَ فِي الْعِلْمِ يَقُولُونَ آمَنَّا بِهِ كُلٌّ مِنْ عِنْدِ رَبِّنَا

உறுதிமிக்க கல்விமான்களோ (அதன் கருத்து தங்களுக்கு முழுமையாக விளங்காவிட்டாலும்) இதையும் நாங்கள் நம்பிக்கை கொண்டோம். அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதான் என்று கூறுவார்கள். (அல்குர்ஆன் 3 : 7)

தனது வேதத்தில் உள்ள முதஷாபிஹ் -பொருள் தெளிவற்ற, மறைவான வசனங்களின் கருத்துகளை யார் ஆராய்வார்களோ அவர்களை அல்லாஹ் பழித்து கூறுகின்றான்:

فَأَمَّا الَّذِينَ فِي قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَاءَ الْفِتْنَةِ
وَابْتِغَاءَ تَأْوِيلِهِ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلَّا اللَّهُ

எவர்களுடைய உள்ளங்களில் மாறுபாடு இருக்கிறதோ அவர்கள் தெளிவற்ற பொருள்களுடைய வசனங்களையே தேடிப் பின்பற்றுவார்கள். குழப்பத்தை உண்டுபண்ணக் கருதியும் அதை (தங்களின் தவறான நோக்கத்திற்கேற்ப) மாற்றுவதற்காகவும் இவ்வாறு செய்கின்றனர். (அல்குர்ஆன் 3 : 7)

முதஷாபிஹ் உடைய விளக்கத்தை அறியத் தேடுவதை வழிகேட்டின் அடையாளமாக ஆக்கி இருப்பதுடன் அது குழப்பத்தை தேடுகின்ற செயல் என்றும் சேர்த்தே பழித்து கூறுகின்றான். அவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும்

அவர்கள் விரும்புவதை அவர்கள் அடைய முடியாதவாறு அவன் அவர்களை தடுத்துவிட்டான். அவர்கள் நாடியதில் இருந்து அவர்களின் ஆசைகளை அல்லாஹ் துண்டித்து விட்டான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلَّا اللَّهُ

ஆயினும், இதன் உண்மைக் கருத்தை அல்லாஹ்வைத் தவிர ஒருவரும் அறிய மாட்டார். (அல்குர்ஆன் 3 : 7)

நிச்சயமாக அல்லாஹ் முதல் வானத்திற்கு இறங்கி வருகின்றான்.

يَنْزِلُ رَبُّنَا تَبَارَكَ وَتَعَالَىٰ كُلَّ لَيْلَةٍ إِلَى السَّمَاءِ الدُّنْيَا حِينَ يَبْقَىٰ ثُلُثُ اللَّيْلِ الآخِرُ

நம்முடைய ரப் தபாரக் வ தஆலா ஒவ்வொரு இரவிலும் இரவின் இறுதி மூன்றாம் பகுதி முதல் வானத்திற்கு இறங்குகிறான்.[2]

இன்னும், நிச்சயமாக அல்லாஹ் மறுமையில் பார்க்கப்படுவான்.

عَنْ جَرِيرٍ رضي الله عنه قَالَ خَرَجَ عَلَيْنَا رَسُولُ اللهِ ﷺ لَيْلَةَ البَدْرِ فَقَالَ إِنَّكُمْ سَتَرَوْنَ رَبَّكُمْ يَوْمَ القِيَامَةِ كَمَا تَرَوْنَ هٰذَا لاَ تُضَامُونَ فِي رُؤْيَتِهِ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் பவுர்ணமி இரவு அன்று எங்களிடம் வந்தார்கள். மேலும், கூறினார்கள்: இந்த சந்திரனை நீங்கள் பார்ப்பதுபோன்று, உங்கள் ரப்பை நீங்கள் மறுமை நாளில் நிச்சயமாக பார்ப்பீர்கள். அவனைப் பார்ப்பதில் நீங்கள் நெருக்கடிக்கு ஆளாக மாட்டீர்கள்.[3]

2. அறிவிப்பாளர்: அபூஹுரைரா رضي الله عنه, நூல்: புகாரி 1145
3. அறிவிப்பாளர்: ஜரீர் رضي الله عنه, நூல்: புகாரி 7436

இன்னும் இதுபோன்ற நபிமொழிகள் பற்றி இமாம் அபூ அப்தில்லாஹ் அஹ்மது இப்னு முஹம்மது இப்னு ஹன்பல் ﵀ அவர்கள் கூறுவதாவது: நாம் இந்த ஹதீஸ்களை நம்பிக்கை கொள்கிறோம். இவற்றை உண்மைப்படுத்துகின்றோம். எப்படி என்று கேட்க மாட்டோம். இவற்றுக்கு விளக்கம் கூறமாட்டோம். இவற்றில் எதையும் மறுக்க மாட்டோம். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் எதையெல்லாம் கொண்டு வந்தார்களோ அவை அனைத்தும் உண்மை என்று நாங்கள் உறுதியாக அறிந்து கொள்வோம். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறிய எதையும் மறுக்க மாட்டோம். அல்லாஹ் தன்னை எப்படி வர்ணித்தானோ அதைத் தாண்டி, அதற்கு அதிகமாக நாம் அல்லாஹ்வை வர்ணிக்க மாட்டோம். ஓர் எல்லையைக் கொண்டோ ஓர் இறுதியைக் கொண்டோ அவனை வர்ணிக்க மாட்டோம்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ

அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. அவன் (அனைத்தையும்) செவியுறுபவன், உற்று நோக்குபவன் ஆவான்.

(அல்குர்ஆன் 42 : 11)

அவன் எப்படி தன்னைப் பற்றி கூறினானோ அப்படித்தான் நாமும் கூறுவோம். அவன் தன்னை எப்படி வர்ணித்தானோ அப்படித்தான் நாமும் அவனை வர்ணிப்போம். அதை தாண்ட மாட்டோம். வர்ணிப்பவர்கள் உடைய வர்ணனை அவனை அடைய முடியாது. குர்ஆனை முழுமையாக நாம் நம்பிக்கை கொள்கின்றோம். அதில் உள்ள முஹ்கமான வசனங்களையும் முதஷாபிஹான வசனங்களையும் நாம் நம்பிக்கை கொள்கிறோம். தவறாக பேசுபவர்களின் பேச்சுக்காக

அல்லாஹ்வின் தன்மைகளில் எந்த தன்மையையும் அவனை விட்டு நாம் நீக்கிவிட மாட்டோம். குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் கூறப்பட்டதை தாண்டி நாம் பேசமாட்டோம். அதன் உண்மை விளக்கம் எப்படி இருக்கும் என்று நாம் அறிய மாட்டோம்; ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் அதை உண்மைப்படுத்தி இருந்தாலே தவிர, இன்னும் குர்ஆன் அதை உறுதிப்படுத்தி இருந்தாலே தவிர.

قَالَ الْإِمَامُ أَبُو عَبْدِاللّٰهِ مُحَمَّدُ بْنُ إِدْرِيْسَ الشَّافِعِيُّ ﵁ آمَنْتُ بِاللّٰهِ وَبِمَا جَاءَ عَنِ اللّٰهِ عَلَىٰ مُرَادِ اللّٰهِ وَآمَنْتُ بِرَسُولِ اللّٰهِ وَبِمَا جَاءَ عَنْ رَسُولِ اللّٰهِ عَلَىٰ مُرَادِ رَسُولِ اللّٰهِ

இமாம் அபூ அப்தில்லாஹ் முஹம்மது இத்ரீஸ் அஷ்ஷாஃபியி[4] ﵁ கூறுவதாவது: நான் அல்லாஹ்வையும் நம்பிக்கை கொண்டேன். இன்னும் அல்லாஹ்வின் புறத்தில் இருந்து வந்ததையும் அல்லாஹ்வுடைய நாட்டத்திற்கு ஏற்ப (அவன் கூறியதைக் கொண்டு அவனுக்கு என்ன நோக்கமோ, அவன் என்ன அர்த்தத்தை மனதில் நாடி இருக்கின்றானோ அதற்கு ஏற்ப) நான் நம்பிக்கை கொண்டேன். இன்னும் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களை நான் நம்பிக்கை கொண்டேன். இன்னும் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடமிருந்து என்ன வந்ததோ அதை ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் நோக்கத்திற்கு ஏற்ப நான் நம்பிக்கை கொண்டேன்.

இந்த அடிப்படையில்தான் நமது சான்றோர், முன்னோர் சென்று இருக்கின்றார்கள். இன்னும் பின்னோரில் வந்த இமாம்களும்

4. பிறப்பு ஹிஜ்ரி 150, இறப்பு ஹிஜ்ரி 204. ஹதீஸ், ஃபிக்ஹ் மற்றும் தஃப்ஸீர் கலையின் இமாமாகத் திகழ்ந்தார்கள்.

இந்த அடிப்படையில்தான் இருந்தார்கள். அல்லாஹ் இவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக! ஆமீன்.

அல்லாஹ்வின் வேதத்திலும் அவனுடைய ரஸூல் ﷺ அவர்களின் கூற்றுகளிலும் அல்லாஹ்வின் தன்மைகள் பற்றி வந்துள்ள அனைத்தையும் அதற்கு மாற்றுப் பொருள் கூறாமல் அதை அப்படியே ஏற்க வேண்டும், அதை அப்படியேதான் கூற வேண்டும், அதை அப்படியே நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதில் **سلف** ஸலஃப் -முன் சென்ற சான்றோரும் **خلف** கலஃப்- பின்னோரில் வந்த இமாம்களும் ஒரே கருத்துடையவர்களாக இருக்கின்றார்கள்.

நாம் அந்த நல்லோரின் வழிமுறைகளைத்தான் பின்பற்ற வேண்டும், அவர்கள் எதை நேர்வழியின் ஒளிச்சுடராக எடுத்துக் கொண்டார்களோ அதைக்கொண்டுதான் நாமும் நேர்வழியை பெற வேண்டும் என்று நமக்கு கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. புதுமையான சொல்கள், செயல்கள் அனைத்தையும் விட்டு நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம். புதுமைகள் (மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சிந்தனைகள், செயல்கள், சடங்குகள்) அனைத்தும் வழிகேடுகள் என்று நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ وَإِيَّاكُمْ وَالْأُمُورَ الْمُحْدَثَاتِ فَإِنَّ كُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ

நீங்கள் எனது வழிமுறையைப் பின்பற்றுங்கள்! எனக்குப் பின்னால் வர இருக்கின்ற நேர்வழி காட்டப்பட்ட நல்லறிவுள்ள கலீஃபாக்களின் வழிமுறையை பின்பற்றுங்கள்! அவற்றை கடவாய்ப் பற்களால் உறுதியாக கவ்விப் பிடியுங்கள்! புதிய காரியங்களை விட்டும் நான் உங்களை எச்சரிக்கின்றேன்.

ஒவ்வொரு புதிய காரியமும் அனாச்சாரமாகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.[5]

وَقَالَ عَبْدُاللّٰهِ بْنِ مَسْعُودٍ ﷺ اِتَّبِعُو وَلَا تَبْتَدِعُوا فَقَدْ كُفِيْتُمْ

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ﷺ கூறுகிறார்கள்: நீங்கள் பின்பற்றி செல்லுங்கள்! புதிதாக எதையும் உருவாக்காதீர்கள்! புதிதாக எதையும் உருவாக்கத் தேவையில்லாத அளவிற்கு உங்களுக்கு இந்த மார்க்கம் நிறைவாக கொடுக்கப்பட்டுள்ளது.

உமர் இப்னு அப்துல் அஸீஸ்[6] ﷺ கூறுகிறார்கள்:

قِفْ حَيْثُ وَقَفَ الْقَوْمُ فَإِنَّهُمْ عَنْ عِلْمٍ وَقَفُوْا وَبِبَصَرٍ نَافِذٍ كَفُّوْا وَلَهُمْ عَلٰى كَشْفِهَا كَانُوْا أَقْوٰى وَبِالْفَضْلِ لَوْ كَانَ فِيْهَا أَحْرٰى فَلَئِنْ قُلْتُمْ حَدَثَ بَعْدَهُمْ فَمَا أَحْدَثَهُ إِلَّا مَنْ خَالَفَ هَدْيَهُمْ وَرَغِبَ عَنْ سُنَّتِهِمْ وَلَقْدْ وَصَفُوْا مِنْهُ مَا يَشْفِيْ وَتَكَلَّمُوْا مِنْهُ بِمَا يَكْفِيْ فَمَا فَوْقَهُمْ مُحَسِّرٌ وَمَا دُوْنَهُمْ مُقَصِّرٌ لَقَدْ قَصَرَ عَنْهُمْ قَوْمٌ فَجَفَوْا وَتَجَاوَزَهُمْ آخَرُوْنَ فَغَلَوْا وَإِنَّهُمْ فَيْمَا بَيْنَ ذٰلِكَ لَعَلٰى هُدًى مُسْتَقِيْم.

அந்த மக்கள் (ஸஹாபா -நபித்தோழர்கள்) எங்கு நின்றார்களோ அங்கு நீயும் நின்றுவிடு! அவர்கள் அறிந்துதான் அங்கு நின்றார்கள். தெளிவான ஆழமான தீர்க்கமான புரிதலின் காரணமாகத்தான் அவர்கள் வாய்மூடி இருந்தார்கள். அவர்கள்

5. அறிவிப்பாளர்: இர்பாழ் இப்னு ஸாரிய்யா ﷺ இப்னு மாஜா 42. தரம்: ஸஹீஹ்.
6. பிறப்பு ஹிஜ்ரி 61, இறப்பு ஹிஜ்ரி 101. உமவி கலீஃபாக்களில் எட்டாவது கலீஃபாவாக இருந்தார். தாபியீன்களில் மிக பிரசித்தி பெற்ற ஒருவர். தனது ஆட்சியில் நீதத்தையும் சமத்துவத்தையும் நிலைநாட்டியவர். கலீஃபா உமர் ﷺ அவர்களின் வமிசத்தைச் சார்ந்தவர்.

அதை வெளிப்படுத்தி பேச ஆற்றல் உள்ளவர்கள்தான். அதை வெளிப்படுத்தி பேசுவதில் சிறப்பு இருந்திருந்தால் அவர்கள் அதைப் பற்றி பேசி அந்த சிறப்பைப் பெற அவர்களே தகுதியானவர்களாக இருப்பார்கள். இந்த விஷயங்கள் எல்லாம் அவர்களுக்கு பின்னால் புதிதாக இப்போது உருவானவை. எனவே நாம் அவற்றைப் பற்றி பேசித்தான் ஆகவேண்டும் என்று நீ கூறினால், ஆம். இவை அவர்களுக்கு பின்னால் வந்தவை என்றால் - அவர்களின் நேர்வழிக்கு மாற்றமாக யார் சென்றார்களோ, அவர்களின் வழிமுறைகளை யார் புறக்கணித்தார்களோ அவர்கள்தான் இவற்றை புதிதாக உருவாக்கினார்கள் என்பதை அறிந்து கொள்! மனதுக்கு தெளிவு கிடைக்கும் அளவிற்கு அவர்கள் (ஸஹாபா) விளக்கமளித்து விட்டார்கள். தேவையான மற்றும் போதுமான அளவு அவர்கள் இது விஷயமாக பேசிவிட்டார்கள். அவர்கள் பேசியதை தாண்டி பேசுகின்றவர் கைசேதப்படுவார். அவர்கள் பேசியதை பேசாமல் விலகியவர் குறைசெய்தவர் ஆவார். அவர்கள் அறிவித்த விஷயங்களை விட்டும் ஒரு கூட்டம் ஒதுங்கி கொண்டது. அப்படி செய்த கூட்டம் முரண்டு பிடித்தவர்கள் ஆவார்கள். அவர்கள் கூறியதை தாண்டி ஒரு கூட்டம் மேலதிகமாக பேசியது. அந்த கூட்டம் வரம்பு மீறிய கூட்டம் ஆகும்.

நிச்சயமாக அந்த ஸஹாபா - நபித்தோழர்கள் மேற்கூறப்பட்ட இரண்டு நிலைப்பாட்டுக்கும் நடுவில், நேரான, கோணலற்ற நேர்வழியில் இருந்தார்கள். (-மார்க்கம் எதை கூறியதோ அதை பேச அவர்கள் தயங்கவில்லை, மார்க்கம் கூறாததை பேச அவர்கள் துணியவில்லை.)

قَالَ الْإِمَامُ أَبُوْ عَمْرٍو الْأَوْزَاعِيُّ ﵁ عَلَيْكَ بِآثَارِ مَنْ سَلَفَ وَإِنْ رَفَضَكَ النَّاسُ وَإِيَّاكَ وَآرَاءَ الرِّجَالِ وَإِنْ زَخْرَفُوهُ لَكَ بِالْقَوْلِ

இமாம் அபூ அம்ர் அல்அவ்ஸாயி[7] ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: உனக்கு முன் சென்ற சான்றோரின் கூற்றுகளை நீ பற்றிப்பிடி! மக்கள் உன்னை தூக்கி எறிந்தாலும் சரியே. பின் தோன்றியவரின் கருத்துகளை விட்டு நீ விலகிவிடு! அவர்கள் எவ்வளதுதான் அதை உனக்கு அலங்கரித்துப் பேசினாலும் சரியே.

ஒருவர் புதுமையான ஒரு கருத்தை பேசி, அதன் பக்கம் மக்களை அழைத்துக் கொண்டிருந்தார். அவரை நோக்கி முஹம்மது இப்னு அப்துர் ரஹ்மான் அல்அத்ரமி[8] ﷺ அவர்கள் கூறினார்கள் இந்த புதுமையான விஷயத்தை ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களும் அபூ பக்ர், உமர், உஸ்மான், அலி ﷺ ஆகியோரும் அறிந்தார்களா அல்லது அறிந்திருக்கவில்லையா? அவர் கூறினார்: அவர்கள் எல்லாம் இதை அறிந்திருக்கவில்லை. அத்ரமி கேட்டார்கள், அவர்கள் அறியாததை நீ அறிந்து விட்டாயா? அவர் கூறினார், இல்லை, அவர்கள் அறிந்துதான் இருந்தார்கள் என்று நானும் இப்போது கூறுகிறேன். அதற்கு அத்ரமி கேட்டார்கள், அவர்கள் இவற்றை எல்லாம் அறிந்திருந்தும் இவற்றைப் பற்றி பேசாமல், மக்களை இதன் பக்கம் அழைக்காமல் இருந்தார்களா, அல்லது அழைத்தார்களா? அவர் கூறினார், அவர்கள் அமைதியாகத்தான் இருந்தார்கள். அதற்கு அத்ரமி கூறினார்: ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களும் அவர்களின் கலீஃபாக்களும் எதைப் பற்றி பேசாமல் இருக்க முடிந்ததோ அதைப் பற்றி பேசாமல் இருக்க உன்னால் முடியவில்லையா? அந்த மனிதர் அத்துடன் பேசமுடியாமல் நின்றுவிட்டார். அந்த சபையில் ஆஜராகி இருந்த மன்னர் கூறினார்: அந்த நல்லவர்களால் முடிந்தது யாருக்கு முடியாமல் போய்விட்டதோ அவருக்கு எந்த நன்மையையும் அல்லாஹ் முடியாமல் ஆக்கி விடுவானாக!

---

7. பெயர்: அபூ அம்ர் அப்துர் ரஹ்மான் இப்னு அம்ர். பிறப்பு ஹிஜ்ரி 88, இறப்பு ஹிஜ்ரி 157. இவர் தபுவுத் தாபியீன்களில் மிகப்பெரிய இமாமாகத் திகழ்ந்தார்.
8. இவர் இமாம் நஸாஈ மற்றும் இமாம் அபூதாவூதின் ஆசிரியர் ஆவார். அஹ்லுஸ் ஸுன்னாவின் மூத்த அறிஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

ஆம், இவ்வாறுதான் எது ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்கும் ஸஹாபாவுக்கும் நன்மையில் அவர்களைப் பின்பற்றிய தாபியீனுக்கும் அவர்களுக்கு பின்னர் வந்த இமாம்களுக்கும் கல்வியில் உறுதியானவர்களுக்கும் முடிந்ததோ அது யாருக்கு முடியவில்லையோ அவரால் எந்த நன்மையையும் செய்ய முடியாமல் அல்லாஹ் ஆக்குவானாக!

நபியும் அவர்களின் ஸஹாபாவும் மற்றும் சான்றோர் அனைவரும் குர்ஆனில் உள்ள ஸிஃபாத் அல்லாஹ்வின் தன்மைகள் சம்பந்தப்பட்ட வசனங்களை ஓதினார்கள். அது தொடர்பான ஹதீஸ்களை படித்தார்கள். அவற்றை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் இந்த வசனங்களையும் ஹதீஸ்களையும் ஏற்று மாற்று கருத்து கூறாமல் நம்பி இருக்க அது பின்னால் வந்தவர்களால் முடியாமல் போகிறது. யார் அந்த நல்லோரின் வழியில் செல்லவில்லையோ அவர்களால் ஒரு போதும் நல்வழியை அடைய முடியாது.

அல்லாஹ் உடைய தன்மைகள் சம்பந்தமாக வந்துள்ள சில வசனங்கள்:

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَيَبْقَىٰ وَجْهُ رَبِّكَ

உமது இறைவனின் திருமுகம் மட்டும் (அழியாது) நிலைத்திருக்கும். (அல்குர்ஆன் 55 : 27)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

بَلْ يَدَاهُ مَبْسُوطَتَانِ

மாறாக, அல்லாஹ்வுடைய இரு கைகளோ (எப்பொழுதும்) விரிந்தே இருக்கின்றன. (அல்குர்ஆன் 5 : 64)

ஈசா عليه السلام கூறுவதாக அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

تَعْلَمُ مَا فِي نَفْسِي وَلَا أَعْلَمُ مَا فِي نَفْسِكَ

எனது நஃப்ஸ் -உள்ளத்திலுள்ளதை நீ நன்கறிவாய். உனது நஃப்ஸ் -உள்ளத்திலுள்ளதை நான் அறியமாட்டேன்.
(அல்குர்ஆன் 5 : 116)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَجَاءَ رَبُّكَ

உமது இறைவனும் வருவான். (அல்குர்ஆன் 89 : 22)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

هَلْ يَنْظُرُونَ إِلَّا أَنْ يَأْتِيَهُمُ اللّٰهُ

அல்லாஹ் அவர்களிடம் வருவதை அவர்கள் எதிர்பார்க்கின்றனரோ? (அல்குர்ஆன் 2 : 210)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

رَضِيَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ

(அந்நாளில்) அவர்களைப் பற்றி அல்லாஹ்வும் மகிழ்ச்சியடைவான். அவர்களும் அவனைப் பற்றி மகிழ்ச்சியடைவார்கள். (அல்குர்ஆன் 5:119)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

يُحِبُّهُمْ وَيُحِبُّونَهُ

அவன் அவர்களை நேசிப்பான்; அவர்களும் அவனை நேசிப்பார்கள். (அல்குர்ஆன் 5 : 54)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَغَضِبَ اللّٰهُ عَلَيْهِمْ

அல்லாஹ் அவர்கள் மீது கோபப்பட்டான். (அல்குர்ஆன் 48 : 6)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

اتَّبَعُوا مَا أَسْخَطَ اللّٰهَ

இவர்கள் அல்லாஹ்வுக்குக் கோபமூட்டக் கூடியவற்றையே பின்பற்றி வந்தனர். (அல்குர்ஆன் 47 : 28)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

كَرِهَ اللّٰهُ انْبِعَاثَهُمْ

(உங்களுடன்) அவர்கள் புறப்படுவதை அல்லாஹ் வெறுத்து விட்டான். (அல்குர்ஆன் 9 : 46)

அல்லாஹ்வின் தன்மைகள் பற்றி வந்துள்ள நபி ﷺ அவர்களின் சில கூற்றுகள்:

يَنْزِلُ رَبُّنَا تَبَارَكَ وَتَعَالَى كُلَّ لَيْلَةٍ إِلَى السَّمَاءِ الدُّنْيَا حِينَ يَبْقَى ثُلُثُ اللَّيْلِ الآخِرُ رواه البخاري

நமது ரப்பு தபாரக வதஆலா ஒவ்வொரு இரவிலும் இரவின் இறுதி மூன்றாவது பகுதியில் கீழ் வானத்திற்கு இறங்கி வருகின்றான்.[9]

يَضْحَكُ اللّٰهُ إِلَىٰ رَجُلَيْنِ يَقْتُلُ أَحَدُهُمَا الآخَرَ يَدْخُلاَنِ الجَنَّةَ

இரு நபர்களைப் பார்த்து அல்லாஹ் சிரிக்கின்றான். அவ்விருவரில் ஒருவர் மற்றவரை கொன்று விடுகின்றார். ஆனால், பிறகு இருவருமே சொர்க்கம் பிரவேசிக்கின்றார்கள்.[10]

عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ ﵁ قَالَ سَمِعْتُ رَسُولَ اللّٰهِ ﷺ يَقُولُ إِنَّ رَبَّكَ لَيَعْجَبُ لِلشَّابِّ لَا صَبْوَةَ لَهُ [11]

நிச்சயமாக உமதிறைவன் சரீர இச்சையின் பக்கம் ஆசையில்லாத வாலிபனைப் பார்த்து ஆச்சரியப்படுகின்றான்.[12]

இவை, இன்னும் இவைப் போன்ற அறிவிப்பாளர்கள் நம்பகமானவர்களாகவும், அறிவிப்பு தொடர் சரியாகவும் உள்ள ஹதீஸ்களை நாம் நம்பிக்கை கொள்வோம், அவற்றை மறுக்க மாட்டோம், இன்னும் அவற்றுக்கு மறுப்பும் கூற மாட்டோம். அவற்றின் வெளிப்படையான கருத்துக்கு மாற்றமான விளக்கத்தை கூற மாட்டோம். அவற்றில் கூறப்பட்டுள்ள அல்லாஹ்வின் தன்மைகளை படைப்புகளின் தன்மைகளுக்கு நாம் ஒப்பாக்க மாட்டோம், இன்னும் அல்லாஹ்விற்கு அவனது பெயர்களிலும் பண்புகளிலும் அவனுக்கு ஒப்பானவரும்

---

9. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: புகாரி, எண்: 1145
10. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: புகாரி, எண்: 2826
11. رواه أبو بكر محمد بن هارون الرُّوياني المتوفىٰ سنة ٣٠٧هـ في مسنده
12. அறிவிப்பாளர்: உக்பா இப்னு ஆமிர் ﵁, நூல்: முஸ்னதுர் ரூயானி, தரம் ஸஹீஹ் - அல்பானி.

சமமானவரும் யாரும் இல்லை என்பதை நாம் நன்கு அறிந்து கொள்வோம்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ

அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. அவன் (அனைத்தையும்) செவியுறுபவன், உற்று நோக்குபவன் ஆவான்.
(அல்குர்ஆன் 42 : 11)

ஏனெனில், மனித எண்ணங்களிலும் கற்பனைகளிலும் எதுவெல்லாம் வருகிறதோ நிச்சயமாக அல்லாஹு தஆலா அதற்கு மாறுபட்டவன் (-அப்பாற்பட்டவன்) ஆவான்.

இன்னும், இந்த வகையை சேர்ந்த வசனங்களில் அல்லாஹ் உடைய பின்வரும் வசனங்களும் அடங்கும்.

الرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوَىٰ

(அவற்றைப் படைத்த) ரஹ்மான் (-அளவற்ற அருளாளனாகிய அல்லாஹ்) அர்ஷின் மீது (தன் மகிமைக்குத் தக்கவாறு) உயர்ந்து விட்டான். (அல்குர்ஆன் 20 : 5)

أَأَمِنْتُمْ مَنْ فِي السَّمَاءِ أَنْ يَخْسِفَ بِكُمُ الْأَرْضَ فَإِذَا هِيَ تَمُورُ

வானத்தில் இருப்பவன், உங்களைப் பூமியில் சொருகிவிட மாட்டான் என்று நீங்கள் அச்சமற்றிருக்கிறீர்களா? அந்நேரத்தில் பூமி அதிர்ந்து நடு நடுங்(கிக்) கு(முறு)ம். (அல்குர்ஆன் 67 : 16)

இன்னும், நபி ﷺ அவர்கள் (தனது தோழர் அழைத்து வந்த) அந்த அடிமைப் பெண்ணை நோக்கி,

فَقَالَ لَهَا أَيْنَ اللهُ قَالَتْ فِي السَّمَاءِ قَالَ مَنْ أَنَا قَالَتْ أَنْتَ رَسُولُ اللهِ قَالَ أَعْتِقْهَا فَإِنَّهَا مُؤْمِنَةٌ رواه مالك ومسلم

அல்லாஹ் எங்கே என்று கேட்டார்கள். அவள், அவன் வானத்திற்கு மேல் இருக்கின்றான் என்றாள். பிறகு நான் யார் என்றார்கள். நீங்கள் அல்லாஹ்வின் தூதர் ﷺ என்றாள். நபி ﷺ அவர்கள் (தனது தோழரை நோக்கி) நீ இவளை உரிமை விட்டுவிடு! நிச்சயமாக இவள் அல்லாஹ்வை நம்பிக்கைக் கொண்ட முஃமினான பெண் ஆவாள் என்று கூறினார்கள்.[13]

முந்திய வேதங்களில் நபி ﷺ அவர்கள் மற்றும் அவர்களின் தோழர்களின் அடையாளங்களில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அவர்கள் பூமியில் சஜ்தா -சிரம் பணிவார்கள், இன்னும் தாங்கள் வணங்குகின்ற இறைவன் வானத்திற்கு மேல் இருப்பதாக நம்புவார்கள்.

அல்லாஹ் அர்ஷுக்கு மேல் உயர்ந்திருக்கின்றான் என்று வந்துள்ள குர்ஆன் வசனங்கள், மற்றும் நபிமொழிகள் அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும், அவற்றை மறுக்கவோ, அவற்றுக்கு மாற்று கருத்து கூறவோ, அவற்றுக்கு உவமைகள் கூறவோ, படைப்பினங்களுடன் அவற்றை ஒப்பிட்டு பேசுவதோ கூடாது என்பதில் ஸலஃப் - சான்றோர் அனைவரும் ஒருமித்த கருத்தில் இருக்கின்றனர்.

இமாம் மாலிக் இப்னு அனஸ் ﵀ அவர்களிடம் கேட்கப்பட்டது: அபூ அப்தில்லாஹ் அவர்களே! அர்ரஹ்மானு அலல் அர்ஷிஸ்தவா. ரஹ்மான் அர்ஷுக்கு மேல் உயர்ந்திருக்கின்றான் (20:5) என்று கூறப்பட்டுள்ளதே, அவன் எப்படி உயர்ந்திருக்கின்றான்? அதற்கு அவர்கள் பதில் கூறினார்கள்:

---

13. அறிவிப்பாளர்: முஆவியா இப்னு அல்ஹகம் ؓ, நூல்: முஸ்லிம், எண்: 537

اَلْاِسْتِوَاءُ غَيُر مَجْهُوْلٍ وَالْكَيْفُ غَيْرُ مَعْقُولٍ وَالْإِيْمَانُ بِهِ وَاجِبٌ وَالسُّؤَالُ عَنْهُ بِدْعَةٌ

உயர்ந்திருத்தல் என்பதன் பொருள் அறியப்படாதது அல்ல. அதன் தன்மை நமது அறிவால் அறிய முடியாத ஒன்றாகும். இருந்தும் அதை நாம் நம்பிக்கை கொள்வது நமக்கு கட்டாயமாகும். ஆகவே, அதைப் பற்றி கேள்வி எழுப்புவது ஒரு பித்அத் -அனாச்சாரமாகும்.

என்று கூறிவிட்டு பிறகு அந்த மனிதனை தனது சபையிலிருந்து வெளியேற்றும்படி கூறினார்கள். அம்மனிதரும் வெளியேற்றப் பட்டார்.

பாடம் 2

كَلَامُ اللّٰهِ

அல்லாஹ்வின் பேச்சு

அல்லாஹு தஆலாவின் தன்மைகளில் ஒன்று அவன் பேசக் கூடியவன், அவனுடைய பேச்சு **قديم** கதீம் ஆகும். அதாவது-*புதிதானது அல்ல. (படைக்கப்பட்டது அல்ல.) அவனது படைப்பினங்களில் அவன் நாடியவர் அவனது பேச்சை கேட்பார்கள். அல்லாஹ்விடமிருந்து எவ்விதமான வாஸிதா[14] இன்றி மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் செவியுற்றார்கள். இன்னும் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அதை செவியுற்றார்கள். இன்னும் தனது மலக்குகளிலும் தனது தூதர்களிலும் அவன் யாருக்கு அனுமதி அளித்தானோ அவர்களும் அதை செவியுற்றார்கள்.

இன்னும் நிச்சயமாக அல்லாஹு தஆலா மறுமையில் முஃமின்களுடன் பேசுவான். அவர்களும் அவனிடம் பேசுவார்கள். அவன் அவர்களுக்கு அனுமதி அளிப்பான். அவர்கள் அவனை பார்ப்பார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَكَلَّمَ اللّٰهُ مُوسَىٰ تَكْلِيمًا

14. வாஸிதா என்றால் துணை சாதனம், ஒன்றை அணுகுவதற்குரிய வழி, இடைத் தரகர் என்று பொருளாகும். மூஸா நபியவர்கள் நேரடியாகவே அல்லாஹ்வின் பேச்சை செவியுற்றார்கள். வேறு ஒன்றின் மூலமாக அல்ல. அல்லது வேறு யாருடைய பேச்சையும் அல்ல.

மூஸாவு(க்கு வஹ்யி அறிவித்தது)டன் அல்லாஹ் பேசியும் இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 164)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

يَا مُوسَىٰ إِنِّي اصْطَفَيْتُكَ عَلَى النَّاسِ بِرِسَالَاتِي وَبِكَلَامِي

மூஸாவே! எனது தூதராக அனுப்புவதற்கும், என்னுடன் பேசுவதற்கும் (உங்கள் காலத்தில் உள்ள) மனிதர்கள் அனைவரிலிருந்தும் நிச்சயமாக நான் உம்மைத் தேர்ந்தெடுத்து இருக்கிறேன். (அல்குர்ஆன் 7 : 144)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

مِنْهُمْ مَنْ كَلَّمَ اللّٰهُ

அவர்களில் சிலருடன் அல்லாஹ் (நேரடியாகப்) பேசியிருக்கிறான். (அல்குர்ஆன் 2 : 253)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَمَا كَانَ لِبَشَرٍ أَنْ يُكَلِّمَهُ اللّٰهُ إِلَّا وَحْيًا أَوْ مِنْ وَرَاءِ حِجَابٍ

அல்லாஹ் (நேருக்குநேர்) பேசுவதற்குரிய தகுதி மனிதரில் ஒருவருக்குமில்லை. எனினும், வஹ்யின் மூலமாகவோ அல்லது திரைக்கு அப்பால் இருந்தே தவிர. (அல்குர்ஆன் 42 : 51)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

فَلَمَّا أَتَاهَا نُودِيَ يَا مُوسَىٰ ○ إِنِّي أَنَا رَبُّكَ

அவர் அதனிடம் வரவே (அவரை நோக்கி) "மூஸாவே!" என்று

சப்தமிட்டழைத்து (நாம் கூறியதாவது): நிச்சயமாக நான்தான் உமது இறைவன். (அல்குர்ஆன் 20 : 11, 12)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

إِنَّنِي أَنَا اللّٰهُ لَا إِلٰهَ إِلَّا أَنَا فَاعْبُدْنِي

நிச்சயமாக நான்தான் அல்லாஹ். என்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் அறவே இல்லை. ஆகவே, என்னையே வணங்குவீராக. (அல்குர்ஆன் 20 : 14)

இந்த வசனங்களில் நான் ..... நான் .... என்று அல்லாஹு தஆலா கூறுகின்றான். அல்லாஹ் பேசினால்தானே இப்படி கூறமுடியும். பேசுபவன் அல்லாஹ் இல்லாமல் வேறு ஒருவனாக இருந்தால், எப்படி நான் உனது இறைவன், நான்தான் அல்லாஹ் என்னை வணங்கு என்று கூற முடியும்?

عَنْ عَبْدِ اللّٰهِ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ إِذَا تَكَلَّمَ اللّٰهُ بِالْوَحْيِ سَمِعَ أَهْلُ السَّمَاءِ لِلسَّمَاءِ صَلْصَلَةً كَجَرِّ السِّلْسِلَةِ عَلَى الصَّفَا فَيُصْعَقُونَ فَلَا يَزَالُونَ كَذٰلِكَ حَتّٰى يَأْتِيَهُمْ جِبْرِيلُ حَتّٰى إِذَا جَاءَهُمْ جِبْرِيلُ فُزِّعَ عَنْ قُلُوبِهِمْ قَالَ فَيَقُولُونَ يَا جِبْرِيلُ مَاذَا قَالَ رَبُّكَ فَيَقُولُ الْحَقَّ فَيَقُولُونَ الْحَقَّ الْحَقَّ رواه أبو داود ٤٧٣٨

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: வஹ்யி அறிவிப்பதற்காக அல்லாஹ் பேசும்போது வானத்தில் உள்ளவர்கள் சலசலவென சப்தத்தை செவியுறுவார்கள். அந்த சப்தம் பாறைகள் மீது இரும்பு சங்கலியை இழுக்கும்போது வெளியாகும் சப்தத்தைப் போன்று இருக்கும். மலக்குகள்

உடனே மயக்கமுற்று விழுவார்கள். ஜிப்ரீல் வருகின்ற வரை அதே நிலையில் அவர்கள் நீடித்து இருப்பார்கள். ஜிப்ரீல் வந்தவுடன் அவர்களுக்கு மயக்கம் தெளியும். ஜிப்ரீலே உங்களது இறைவன் என்ன கூறினான் என்று அவர்கள் கேட்பார்கள். உண்மையைக் கூறினான் என்று அவர் கூறுவார். அதற்கு, அவன் உண்மையைத்தான் கூறுவான், அவன் உண்மையைத்தான் கூறுவான் என்று மலக்குகள் கூறுவார்கள்.[15]

عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ أُنَيْسٍ ﵁ قَالَ سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ يَحْشُرُ اللّٰهُ العِبَادَ فَيُنَادِيهِمْ بِصَوْتٍ يَسْمَعُهُ مَنْ بَعُدَ كَمَا يَسْمَعُهُ مَنْ قَرُبَ أَنَا المَلِكُ أَنَا الدَّيَّانُ رواه البخاري معلقا ورواه الطبراني في الكبير

நபி ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன்: அல்லாஹ் அடியார்களை எழுப்புவான். அவர்களை அவன் சப்தமிட்டு அழைப்பான். அருகில் உள்ளவர் அதை செவியுறுவதுபோன்று தூரமாக இருப்பவரும் அதை செவியுறுவார். அவன் கூறுவான்: நான்தான் உண்மையான அரசன், நான்தான் கூலி கொடுப்பவன்.[16]

----

15. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﵁ நூல்: அபூ தாவூத், எண்: 4738
16. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உனைஸ் அல்அன்சாரி, நூல்: முஃஜம் கபீர் - தபரானி, எண்: 14914. அறிவிப்பாளர் தொடர் இல்லாமல் இமாம் புகாரி இதை தனது ஸஹீஹ் நூலில் பதிவு செய்து இருக்கிறார்கள்.

பாடம் 3

اَلْقُرْآنُ كَلَامُ اللّٰهِ

அல்குர்ஆன் அல்லாஹ்வின் பேச்சாகும்

மகத்துவமிக்க அல்குர்ஆன் அல்லாஹ் உடைய பேச்சுகளில் உள்ளதாகும். இது அல்லாஹ்வின் தெளிவான வேதமாகும்; அவனுடைய வலுவான கயிறாகும்; அவனுடைய நேரான பாதையாகும்; அகிலங்களின் இறைவன் இறக்கிய புத்தகமாகும், நம்பிக்கைக்குரிய ரூஹ் (ஜிப்ரீல்) இதை தெளிவான அரபி மொழியில் ரஸூல்மார்களின் தலைவரின் உள்ளத்தில் இறக்கி வைத்தார்; இது இறக்கப்பட்டது; படைக்கப்பட்டதல்ல; அவனிடமிருந்துதான் இது ஆரம்பமானது; அவனிடமே இது மீண்டுவிடும்.

இந்த குர்ஆன் முஹ்கமான (உறுதிசெய்யப்பட்ட) அத்தியாயங்கள், தெளிவான வசனங்கள், எழுத்துக்கள், வார்த்தைகள் உடையதாகும். யார் இதை தெளிவாக, சரியான உச்சரிப்போடு ஓதுவாரோ அவருக்கு ஒவ்வொரு எழுத்திற்கும் பத்து நன்மைகள் உண்டு. அதற்கு ஆரம்பமும் இறுதியும் உண்டு. இது பல பாகங்களையும் பகுதிகளையும் உடையதாகும். இந்த குர்ஆன் நாவுகளில் ஓதப்படுகின்றது. நெஞ்சங்களில் மனனம் செய்யப்படுகின்றது. காதுகளில் செவியுறப்படுகின்றது. ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. இதில் **محكم** முஹ்கமான இன்னும் **متشابه** முதஷாபிஹான வசனங்கள் உள்ளன. **ناسخ** நாசிக் -மாற்றிய

வசனங்கள், **منسوخ** மன்சூக் - மாற்றப்பட்ட வசனங்கள், **خاص** காஸ் -குறிப்பான வசனங்கள், **عام** ஆம் -பொதுவான வசனங்கள், **أمر** அம்ர் -கட்டளைகள் நிறைந்த வசனங்கள், **نهي** நஹ்யி -விலக்கல்கள் நிறைந்த வசனங்கள் ஆகியவை உள்ளன.

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

لَا يَأْتِيهِ الْبَاطِلُ مِنْ بَيْنِ يَدَيْهِ وَلَا مِنْ خَلْفِهِ تَنْزِيلٌ مِنْ حَكِيمٍ حَمِيدٍ

இதற்கு முன்னும் சரி, இதற்குப் பின்னும் சரி உண்மைக்கு மாறான ஒரு விஷயமும் (அல்குர்ஆனாகிய) இதை (அணுகவே) அணுகாது. மிக்க புகழும் ஞானமும் உடையவனால் (இது) இறக்கப்பட்டது. (அல்குர்ஆன் 41 : 42)

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

قُلْ لَئِنِ اجْتَمَعَتِ الْإِنْسُ وَالْجِنُّ عَلَىٰ أَنْ يَأْتُوا بِمِثْلِ هَٰذَا الْقُرْآنِ
لَا يَأْتُونَ بِمِثْلِهِ وَلَوْ كَانَ بَعْضُهُمْ لِبَعْضٍ ظَهِيرًا

(நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து, சிலர் சிலருக்கு உதவியாக இருந்து இதைப்போன்ற ஒரு குர்ஆனைக் கொண்டுவர முயற்சித்தபோதிலும் இதைப் போல் கொண்டு வர அவர்களால் (முடியவே) முடியாது.
(அல்குர்ஆன் 17 : 88)

இந்த அரபிமொழி வேதமான குர்ஆனைத்தான்,

لَنْ نُؤْمِنَ بِهَٰذَا الْقُرْآنِ

இந்த குர்ஆனைக் கொண்டு நாங்கள் நம்பிக்கை கொள்ளவே மாட்டோம் (அல்குர்ஆன் 34 : 31)

என்று நிராகரித்த மக்கள் கூறியதாக அல்லாஹு தஆலா கூறுகின்றான்.

அவர்களின் இன்னும் சிலர் இவ்வாறு கூறியதாக அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

إِنْ هٰذَا إِلَّا قَوْلُ الْبَشَرِ

இது மனிதர்களுடைய சொல்லே தவிர வேறில்லை
(அல்குர்ஆன் 74 : 25)

அவர்களை கண்டித்தும் எச்சரித்தும் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

سَأُصْلِيهِ سَقَرَ

ஆகவே, நாம் அவனை 'சகர்' என்ற நரகத்தில் எறிவோம்.
(அல்குர்ஆன் 74 : 26)

இன்னும் சிலர், இது ஒரு கவிதை என்று கூறினார்கள். அதற்கு மறுப்பு தெரிவித்து அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَمَا عَلَّمْنَاهُ الشِّعْرَ وَمَا يَنْبَغِي لَهُ إِنْ هُوَ إِلَّا ذِكْرٌ وَقُرْآنٌ مُبِينٌ

(நமது தூதராகிய) அவருக்கு நாம் கவி கூறக் கற்றுக் கொடுக்கவில்லை. அது அவருக்குத் தகுமானதும் அல்ல; இது (நன்மை தீமைகளைத்) தெளிவாக்கக்கூடிய குர்ஆனும் நல்லுபதேசமும் தவிர வேறில்லை. (அல்குர்ஆன் 36 : 69)

இது கவிதை என்று அவர்கள் சொன்னதை அல்லாஹ் மறுத்தான். ஆனால், இது குர்ஆன் -படிக்கப்படுகின்ற நூல் என்பதை அல்லாஹ் உறுதிசெய்தான். ஆகவே, இந்த குர்ஆன் அரபி மொழியில் உள்ள வேத புத்தகமாகும், இது வார்த்தைகள்,

எழுத்துக்கள், இன்னும் வசனங்களை உடையதாகும் என்பதில் புத்தியுள்ள எவருக்கும் சந்தேகம் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், இது வார்த்தைகள் மற்றும் எழுத்துக்களால் உருவானதாக இல்லை என்றால் இதைப் பார்த்து அவர்கள் எப்படி கவிதை என்று கூறி இருப்பார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَإِنْ كُنْتُمْ فِي رَيْبٍ مِمَّا نَزَّلْنَا عَلَىٰ عَبْدِنَا فَأْتُوا بِسُورَةٍ مِنْ مِثْلِهِ
وَادْعُوا شُهَدَاءَكُمْ مِنْ دُونِ اللَّهِ إِنْ كُنْتُمْ صَادِقِينَ

நாம் (நமது தூதர் முஹம்மது என்னும்) நம் அடியாருக்கு இறக்கிய இ(வ்வேதத்)தில் நீங்கள் சந்தேகப்பட்டு (இது அல்லாஹ்வினால் அருளப்பட்டதல்ல என்று கூறுகின்ற) நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அல்லாஹ்வைத் தவிர உங்களை ஆமோதிப்பவர்களையும் (கவிதை எழுதுவதில் திறமையாளர்களையும் இது விஷயத்தில் உங்களுக்கு உதவி செய்பவர்களையும்) நீங்கள் அழைத்துக் கொண்டு இதைப் போன்ற ஓர் அத்தியாயத்தை (அமைத்து)க் கொண்டு வாருங்கள். (அல்குர்ஆன் 2 : 23)

இந்த வசனத்தில் அல்லாஹ் இது போன்ற ஓர் அத்தியாயத்தை கொண்டு வர சவால் விடுகின்றான். அது என்னவென்றே புரிய முடியாத ஒன்றாக இருந்தால் அதுபோன்ற ஒன்றை கொண்டு வாருங்கள் என்று எப்படி சவால்விட முடியும்!?

இன்னும் அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَإِذَا تُتْلَىٰ عَلَيْهِمْ آيَاتُنَا بَيِّنَاتٍ قَالَ الَّذِينَ لَا يَرْجُونَ لِقَاءَنَا ائْتِ
بِقُرْآنٍ غَيْرِ هَٰذَا أَوْ بَدِّلْهُ قُلْ مَا يَكُونُ لِي أَنْ أُبَدِّلَهُ مِنْ تِلْقَاءِ نَفْسِي

(முன்னர் அழிந்து விட்டவர்களின் இடத்தில் அமர்த்தப்பட்ட) இவர்களுக்குநம் தெளிவான வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டால் (மறுமையில்) நம்மைச் சந்திப்பதை நம்பாத இவர்கள் (உம்மை நோக்கி), இது அல்லாத வேறொரு குர்ஆனை நீர் கொண்டு வருவீராக; அல்லது எங்கள் இஷ்டப்படி இதை மாற்றிவிடுவீராக என்று கூறுகின்றனர். (அதற்கு அவர்களை நோக்கி, உங்கள் விருப்பத்திற்காக) நானே (என் இஷ்டப்படி) இதை மாற்றிவிட எனக்கு எவ்வித சக்தியுமில்லை. (அல்குர்ஆன் 10 : 15)

இந்த வசனத்திலும் குர்ஆன் என்பது அவர்கள் மீது ஓதிக்காட்டப்படுகின்ற வசனங்கள் ஆகும் என்பதை அல்லாஹ் உறுதி செய்கின்றான்.

இன்னும் அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

بَلْ هُوَ آيَاتٌ بَيِّنَاتٌ فِي صُدُورِ الَّذِينَ أُوتُوا الْعِلْمَ

அவ்வாறன்று. இது (இறைவனால்தான் அருளப்பட்ட) தெளிவான வசனங்களாக இருக்கின்றன. ஆகவே மெய்யான ஞானம் கொடுக்கப்பட்டவர்களின் உள்ளங்களில் இவை பதிந்துவிடும்.
(அல்குர்ஆன் 29 : 49)

இன்னும் அல்லாஹ் சத்தியம் செய்து கூறுகின்றான்:

إِنَّهُ لَقُرْآنٌ كَرِيمٌ ○ فِي كِتَابٍ مَكْنُونٍ ○ لَا يَمَسُّهُ إِلَّا الْمُطَهَّرُونَ ○

நிச்சயமாக இது மிக்க கண்ணியமுள்ள குர்ஆனாகும். (இது 'லவ்ஹுல் மஹ்ஃபூள்' என்னும்) பாதுகாக்கப்பட்ட புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. (வானவர்களாகிய) பரிசுத்தவான்களைத் தவிர, (மற்றெவரும்) அதைத் தொட மாட்டார்கள்.
(அல்குர்ஆன் 56 : 77-79)

இன்னும் இருபத்தி ஒன்பது அத்தியாயங்களை தனிப்பட்ட எழுத்துக்களை கூறி ஆரம்பித்திருக்கின்றான். உதாரணமாக:

كهيعص (அல்குர்ஆன் 19 : 1)

حم عسق (அல்குர்ஆன் 42 : 1)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

اقْرَءُوا قَبْلَ أَنْ يَأْتِيَ أَقْوَامٌ يَقْرَءُونَ يُقِيمُونَ حُرُوفَهُ كَمَا يُقَامُ السَّهْمُ لَا يُجَاوِزُ تَرَاقِيَهُمْ يَتَعَجَّلُونَ أَجْرَهُ وَلَا يَتَأَجَّلُونَهُ رواه ابن المبارك في الزهد

நீங்கள் குர்ஆனை ஓதுங்கள் சில மக்கள் வருவதற்கு முன்னர். அவர்கள் அம்பு நேர்படுத்தப்படுவது போன்று குர்ஆனின் எழுத்துகளை சரி செய்வார்கள். ஆனால், அந்த குர்ஆன் அவர்களின் தொண்டைக் குழியைத் தாண்டாது. குர்ஆனின் கூலியை உலகிலேயே பெறவேண்டும் என்று விரும்புவார்கள். மறுமையில் பெறவேண்டும் என்று விரும்ப மாட்டார்கள்.[17]

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் رضي الله عنه கூறுகிறார்கள்: யார் குர்ஆனிலிருந்து ஒரே ஓர் எழுத்தை மறுப்பாரோ அவர் குர்ஆன் முழுவதையும் மறுத்தவராக ஆகிவிடுவார்.[18]

குர்ஆனுடைய சூராக்கள், ஆயத்துகள், வார்த்தைகள், எழுத்துகள் என அனைத்தையும் முஸ்லிம்கள் எண்ணி இருக்கின்றார்கள். இதில் அவர்களுக்கு மத்தியில் ஒருமித்த கருத்துள்ளவர்களாக இருந்தார்கள்.

---

17. அறிவிப்பாளர்: ஸஹ்ல் இப்னு ஸாயித் رضي الله عنه, நூல் அஸ்ஸுஹ்த் - இப்னுல் முபாரக், எண்: 813

18. நூல்: தஃப்ஸீர் தபரி

மேலும், குர்ஆனில் இருந்து ஒரு சூராவையோ, அல்லது ஓர் ஆயத்தையோ அல்லது ஒரு வார்த்தையையோ அல்லது எல்லோரும் ஏற்றுக்கொண்ட ஓர் எழுத்தையோ யாரும் மறுத்தால் அவர் காஃபிர் - இறை நிராகரிப்பாளராக ஆகிவிடுவார் என்பதில் முஸ்லிம்களுக்கு மத்தியில் அறவே மாறுபட்ட கருத்து இல்லை.

ஆகவே, குர்ஆன் என்பது எழுத்துக்களை உடையது என்பதற்கு இது மிக உறுதியான ஆதாரமாக இருக்கின்றது.

பாடம் 4

رُؤْيَةُ الْـمُؤْمِنِينَ لِرَبِّهِمْ يَومَ الْقِيَامَةِ

நம்பிக்கையாளர்கள் தங்கள் இறைவனை மறுமை நாளில் பார்ப்பது

முஃமின்கள் -நம்பிக்கையாளர்கள் தங்கள் இறைவனை மறுமையில் தங்கள் புறக்கண்களால் பார்ப்பார்கள்; அவனை சந்திப்பார்கள். அவன் அவர்களிடம் பேசுவான். அவர்கள் அவனிடம் பேசுவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وُجُوهٌ يَوْمَئِذٍ نَاضِرَةٌ ○ إِلَىٰ رَبِّهَا نَاظِرَةٌ ○

அந்நாளில் சில(ருடைய) முகங்கள் மிக்க ஒளிவுடன் மகிழ்ச்சியுடையவையாக இருக்கும். (அவை) தங்கள் இறைவனை நோக்கிய வண்ணமாக இருக்கும். (அல்குர்ஆன் 75 : 22)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

كَلَّا إِنَّهُمْ عَنْ رَبِّهِمْ يَوْمَئِذٍ لَمَحْجُوبُونَ

அவ்வாறல்ல. (விசாரணைக்காகக் கொண்டு வரப்படும்) அந்நாளில் நிச்சயமாக இவர்கள் (-நிராகரிப்பாளர்கள்) தங்கள் இறைவனை விட்டும் தடுக்கப்பட்டு விடுவார்கள்.

(அல்குர்ஆன் 83 : 15)

நிராகரிப்பாளர்கள் மீது அல்லாஹ் கோபமாக இருக்கின்ற காரணத்தால் அவனை அவர்கள் பார்க்க முடியாதவாறு தடுக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளதிலிருந்து நம்பிக்கையாளர்கள் மீது அல்லாஹ் திருப்தியுடன் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் அவனைப் பார்ப்பார்கள் என்பதை அறிய முடிகிறது. காஃபிர்களும் பார்க்க மாட்டார்கள், முஃமின்களும் பார்க்க மாட்டார்கள் என்று இருந்தால் இருவருக்கும் இடையில் எவ்வித வேறுபாடும் இல்லாமல் போய்விடும். இன்னும் இந்த வசனத்தில் காஃபிர்கள் தங்கள் இறைவனை பார்க்க முடியாமல் தடுக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டதில் எவ்வித அர்த்தமும் இருக்காது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّكُمْ سَتَرَوْنَ رَبَّكُمْ كَمَا تَرَوْنَ هٰذَا الْقَمَرَ لاَ تُضَامُّونَ فِي رُؤْيَتِهِ

رَوَاهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ

நிச்சயமாக நீங்கள் உங்கள் இறைவனை பார்ப்பீர்கள், நீங்கள் இந்த சந்திரனைப் பார்ப்பது போன்று. அவனைப் பார்ப்பதில் நீங்கள் நெருக்கடிக்கு ஆளாக மாட்டீர்கள்.[19]

இந்த ஹதீஸில், பார்ப்பதற்குத்தான் நபி ﷺ அவர்கள் உவமை கூறினார்கள். பார்க்கப்படுகின்ற அல்லாஹ்விற்கு உவமை கூறவில்லை. ஏனெனில், நிச்சயமாக அல்லாஹு தஆலாவிற்கு ஒப்பானவரும் இல்லை, அவனுக்கு சமமானவரும் இல்லை.

----

19. அறிவிப்பாளர்: ஜரீர் இப்னு அப்தில்லாஹ், நூல்: புகாரி, எண்: 554

பாடம் 5

اَلْقَضَاءُ وَالْقَدَرُ

தீர்ப்பும் விதியும்[20]

அல்லாஹு தஆலாவின் தன்மைகளில் ஒன்று, நிச்சயமாக அவன் தான் நாடியதை செய்து முடிப்பவன் என்பது. அவன் நாட்டமில்லாமல் எதுவும் நடக்காது. அவனுடைய நாட்டத்திலிருந்து எதுவும் வெளியேறிவிட முடியாது. அவனுடைய விதிக்கு அப்பாற்பட்டு இப்பிரபஞ்சத்தில் எதுவும் இல்லை. எதுவாக இருந்தாலும் அவனுடைய விதி, மற்றும் அவனுடைய திட்டமிடுதல்படிதான் நடக்கும். முடிவு செய்யப்பட்ட விதியை விட்டும் விலகி செல்ல இடமே இல்லை.

எழுதப்பட்ட பலகையில் என்ன எழுதப்பட்டு விட்டதோ அதை எதுவும் யாரும் தாண்டிவிட முடியாது. உலக மக்கள் என்ன செய்வார்கள் என்பதை அவன்தான் நாடுகின்றான்.

அவன் அவர்களை பாதுகாத்து விட்டால் அவர்கள் அவனுக்கு மாறுசெய்ய முடியாது. அவர்கள் எல்லோரும் அவனுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று அவன் விதியில்

20. கழா என்றால் தீர்ப்பு, முடிவு, நிறைவேற்றுதல் என்று பொருளாகும். அல்லாஹ் எதை முடிவு செய்து விட்டானோ அதை கழா என்று கூறப்படுகிறது. கதர் என்றால் அனுமானிப்பது, நிர்ணயிப்பது, திட்டமிடுவது, வரையரை செய்வது, விதிப்பது என்று பொருளாகும். அல்லாஹ் படைப்பினங்கள் குறித்து, இன்னது நடக்கும், இன்னது நடக்காது, இது இப்படி, இது இப்படி என்று எதை திட்டமிட்டு வரையரை செய்து விட்டானோ அதை கதர் என்று சொல்லப்படும். தமிழில் கழா என்றால் முடிவு, கதர் என்றால் விதி என பொருள் கூறலாம்.

நாடிவிட்டால் அவர்கள் அவனுக்கு கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். அவர்களால் அவனது நாட்டத்தை மீற முடியாது.

அவன் படைப்புகளையும் அவர்களின் செயல்களையும் படைத்தான், படைக்கின்றான். அவர்களின் வாழ்வாதாரங்களையும் அவர்களின் தவணைகளையும் அவனே நிர்ணயித்திருக்கின்றான்.

தனது ஞானத்தின் பிரகாரம் அவன் யாரை நாடுகின்றானோ அவர்களை நேர்வழியில் செலுத்துகின்றான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

لَا يُسْأَلُ عَمَّا يَفْعَلُ وَهُمْ يُسْأَلُونَ

அவன் செய்பவற்றைப் பற்றி (ஏன் செய்தாய், எதற்காகச் செய்தாய் என்று) எவருமே அவனைக் கேட்க முடியாது. (அவ்வளவு சர்வ சுதந்திரமும், வல்லமையும் உள்ளவன் அவன்.) எனினும், படைப்புகள்தான் (அவரவர்களுடைய செயலைப் பற்றிக்) கேட்கப்படுவார்கள். (அல்குர்ஆன் 21 : 23)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

إِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنَاهُ بِقَدَرٍ

நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் குறிப்பான திட்டப்படியே படைத்திருக்கிறோம். (அல்குர்ஆன் 54 : 49)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَخَلَقَ كُلَّ شَيْءٍ فَقَدَّرَهُ تَقْدِيرًا

அவனே அனைத்தையும் படைத்து அவற்றுக்குரிய இயற்கைத் தன்மையையும் அமைத்தவன். (அல்குர்ஆன் 25 : 2)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

مَا أَصَابَ مِنْ مُصِيبَةٍ فِي الْأَرْضِ وَلَا فِي أَنْفُسِكُمْ
إِلَّا فِي كِتَابٍ مِنْ قَبْلِ أَنْ نَبْرَأَهَا

(பொதுவாக) பூமியிலோ அல்லது (குறிப்பாக) உங்களுக்கோ ஏற்படக்கூடிய எந்தச் சிரமமும், (நஷ்டமும்) அது ஏற்படுவதற்கு முன்னதாகவே (லவ்ஹுல் மஹ்ஃபூள் என்னும்) பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாமல் இல்லை.
(அல்குர்ஆன் 57 : 22)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

فَمَنْ يُرِدِ اللّٰهُ أَنْ يَهْدِيَهُ يَشْرَحْ صَدْرَهُ لِلْإِسْلَامِ وَمَنْ يُرِدْ أَنْ يُضِلَّهُ
يَجْعَلْ صَدْرَهُ ضَيِّقًا حَرَجًا

அல்லாஹ் எவர்களுக்கு நேர்வழி காண்பிக்க விரும்புகிறானோ அவர்களுடைய உள்ளத்தை இஸ்லாமின் பக்கம் (செல்ல) விரிவாக்குகிறான். எவர்களை, அவர்களுடைய வழிகேட்டிலேயே விட்டுவிட விரும்புகிறானோ அவர்களுடைய உள்ளத்தை (நிர்ப்பந்தத்தால்) வானத்தில் ஏறுபவ(னி)ன் (உள்ளம்) போல் கஷ்டப்பட்டு சுருங்கும்படியாக்கி விடுகிறான்.
(அல்குர்ஆன் 6 : 125)

قَالَ فَأَخْبِرْنِي عَنِ الْإِيمَانِ قَالَ أَنْ تُؤْمِنَ بِاللّٰهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ
وَرُسُلِهِ وَالْيَوْمِ الْآخِرِ وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ قَالَ صَدَقْتَ

ஜிப்ரீல் ﷺ நபி ﷺ அவர்களிடம் ஈமான் என்றால் என்ன என்று கேட்டார். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நீ அல்லாஹ்வையும் அவனது வானவர்களையும் அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொள்ள வேண்டும். இன்னும் விதியையும் அதன் நன்மையையும் அதன் தீமையையும் நீ நம்பிக்கை கொள்ள வேண்டும். அதற்கு, நீர் உண்மைதான் கூறினீர் என்று ஜிப்ரீல் ﷺ கூறினார்.[21]

நபி ﷺ அவர்கள் ஹசன் இப்னு அலி ﷺ அவர்களுக்கு வித்ரு தொழுகையின் குனூத்தில் ஓதுவதற்கு கற்றுக்கொடுத்த துஆவில் வருவதாவது:

وَقِنِي شَرَّ مَا قَضَيْتَ

நீ முடிவுசெய்தவற்றின் தீங்கிலிருந்து என்னை பாதுகாப்பாயாக![22]

அல்லாஹ்வின் விதியை அவனது கட்டளைகளை விடுவதற்கும் அவன் தடுத்தவற்றை செய்வதற்கும் தர்க்க ஆதாரமாக நாம் ஆக்கிவிடக் கூடாது. மாறாக, நாம் நம்பிக்கை கொள்ளவேண்டியதும், நாம் அறிய வேண்டியதும் என்னவென்றால், நமக்கு எதிராக அல்லாஹ்விற்குத்தான் ஆதாரம் இருக்கிறது. ஏனெனில், அவன் வேதங்களை இறக்கி, தூதர்களை அனுப்பி நமக்கு நல்லதையும் தீயதையும் தெளிவுபடுத்தி இருக்கின்றான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَى اللهِ حُجَّةٌ بَعْدَ الرُّسُلِ وَكَانَ اللهُ عَزِيزًا حَكِيمًا

21. அறிவிப்பாளர்: இப்னு உமர் ﷺ, நூல்: முஸ்லிம், எண் 1.
22. அறிவிப்பாளர்: ஹசன் இப்னு அலி ﷺ, நூல்: இப்னு மாஜா, எண்: 1178

அல்லாஹ்வின் மீது (குற்றம் கூற) மனிதர்களுக்கு ஓர் ஆதாரமும் இல்லாதிருக்க இத்தூதர்களுக்குப் பின்னரும் (யஹ்யா போன்ற வேறு) பல தூதர்களை (சொர்க்கத்தைக்கொண்டு) நற்செய்தி கூறுகிறவர்களாகவும், (நரகத்தைக் கொண்டு) அச்சமூட்டி எச்சரிக்கிறவர்களாகவும் (நாம் அனுப்பிவைத்தோம்). அல்லாஹ் (அனைவரையும்) மிகைத்தவனாக, ஞானமுடையவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 165)

நாம் இந்த இடத்தில் அறியவேண்டியது என்னவெனில், ஒரு செயலை செய்வதற்கும், ஒரு செயலை விடுவதற்கும் ஆற்றலுள்ளவரைத்தான் நிச்சயமாக அல்லாஹ் ஏவுவான், அல்லது தடுப்பான். அவன் யாரையும் அவர் பாவம் செய்வதற்கு நிர்ப்பந்திக்கவில்லை. நன்மையை அவர் விடுவதற்கும் அவன் அவரை நிர்ப்பந்திக்கவில்லை.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا

அல்லாஹ் ஓர் ஆத்மாவை அதன் சக்திக்கு மேல் நிர்ப்பந்திப்பதில்லை. (அல்குர்ஆன் 2 : 286)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

فَاتَّقُوا اللّٰهَ مَا اسْتَطَعْتُمْ

ஆதலால், உங்களால் சாத்தியமான வரை அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 64 : 16)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

الْيَوْمَ تُجْزَىٰ كُلُّ نَفْسٍ بِمَا كَسَبَتْ لَا ظُلْمَ الْيَوْمَ

இன்றைய தினம் ஒவ்வொரு ஆத்மாவுக்கும், அவை செய்த செயல்களுக்குத் தக்க கூலி கொடுக்கப்படும். இன்றைய தினம் அறவே (யாருக்கும்) அநீதி இழைக்கப்படாது.

(அல்குர்ஆன் 40 : 17)

மேற்கூறப்பட்ட வசனங்கள் அறிவிப்பதாவது: அடியானிடம் ஒரு செயலை செய்வதற்கு ஆற்றல் உள்ளது. அவன் விருப்பப்படிதான் ஒரு காரியத்தை செய்கின்றான். ஆகவே, அவன் செய்தது நன்மையாக இருந்தால் அதற்காக அவனுக்கு நற்கூலி கொடுக்கப்படும். அவன் செய்தது பாவமாக இருந்தால் அவனுக்கு தண்டனை கொடுக்கப்படும். ஆனால், அதே நேரத்தில் அடியானின் ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் விதி மற்றும் தீர்ப்பின்படிதான் நடக்கும்.

பாடம் 6

اَلْإِيْمَانُ قَوْلٌ وَعَمَلٌ

ஈமான் என்பது சொல், செயல்

ஈமான் என்பது நாவினால் சொல்வதும் உறுப்புகளால் செய்வதும் உள்ளத்தால் நம்பிக்கை கொள்வதும் ஆகும். அது நன்மைகளால் அதிகரிக்கும், பாவத்தால் குறைந்துவிடும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ
وَيُقِيمُوا الصَّلَاةَ وَيُؤْتُوا الزَّكَاةَ وَذَلِكَ دِينُ الْقَيِّمَةِ

(எனினும், அவர்கள்) இறைவனுடைய கலப்பற்ற மார்க்கத்தையே பின்பற்றி, மற்ற மார்க்கங்களைப் புறக்கணித்து, அல்லாஹ் ஒருவனையே வணங்கி, தொழுகையையும் கடைப்பிடித்து, ஜகாத்தும் கொடுத்து வருமாறே தவிர, (வேறெதுவும் இத்தூதர் மூலம்) அவர்களுக்கு ஏவப்படவில்லை. (இது, அவர்களுடைய வேதத்திலும் ஏவப்பட்ட விஷயம்தான்.) இதுதான் நிலையான சட்டங்களுடைய மார்க்கம். (அல்குர்ஆன் 98 : 5)

இந்த வசனத்தில் அல்லாஹ்வை வணங்குவது, இணைவைக்காமல், மனத்தூய்மையுடன் இருப்பது, தொழுகையை நிலை நிறுத்துவது, ஸகாத்தை கொடுப்பது ஆகிய இவை அனைத்தும் மார்க்கத்தில் உள்ளவை என்று அல்லாஹ் ஆக்கி இருக்கின்றான்.

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ الْإِيمَانُ بِضْعٌ وَسَبْعُونَ أَوْ بِضْعٌ وَسِتُّونَ شُعْبَةً فَأَفْضَلُهَا قَوْلُ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَأَدْنَاهَا إِمَاطَةُ الْأَذَىٰ عَنِ الطَّرِيقِ وَالْحَيَاءُ شُعْبَةٌ مِنَ الْإِيمَانِ رَوَاهُ مُسْلِمٌ

ஈமான் எழுபது இன்னும் கொஞ்சம் அல்லது அறுபது இன்னும் கொஞ்சம் கிளைகளை உடையதாகும். அவற்றில் சிறந்தது லா இலாஹ இல்லல்லாஹ் கூறுவதாகும். அவற்றில் தாழ்ந்தது பாதையிலிருந்து தொந்தரவுகளை நீக்குவதாகும். வெட்கமும் ஈமானின் ஒரு கிளையாகும்.[23]

இந்த நபிமொழியில் சொல்லையும் செயலையும் ஈமானில் சேர்க்கப்பட்டுள்ளது.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

فَزَادَتْهُمْ إِيمَانًا

அவர்களுடைய நம்பிக்கையை (இது) அதிகப்படுத்தியே விட்டது. (அல்குர்ஆன் 9 : 124)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

لِيَزْدَادُوا إِيمَانًا

நம்பிக்கை மேலும் அதிகரிக்கும்படி செய்தான்.
(அல்குர்ஆன் 48 : 4)

عَنْ أَنَسٍ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ يَخْرُجُ مِنَ النَّارِ مَنْ قَالَ لاَ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَفِي قَلْبِهِ وَزْنُ شَعِيرَةٍ مِنْ خَيْرٍ وَيَخْرُجُ مِنَ النَّارِ مَنْ قَالَ لاَ إِلٰهَ إِلَّا

23. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ﵁, நூல்: முஸ்லிம், எண்: 35

اللّٰهُ وَفِي قَلْبِهِ وَزْنُ بُرَّةٍ مِنْ خَيْرٍ وَيَخْرُجُ مِنَ النَّارِ مَنْ قَالَ لاَ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَفِي قَلْبِهِ وَزْنُ ذَرَّةٍ مِنْ خَيْرٍ رَوَاهُ الْبُخَارِيُّ

லா இலாஹ இல்லல்லாஹ் கூறியவர் அவருடைய உள்ளத்தில் நன்மையில் ஒரு பார்லி கோதுமையின் அளவு இருந்தாலும் அவர் நரகத்தில் இருந்து வெளியேறுவார். லா இலாஹ இல்லல்லாஹ் கூறியவர் அவருடைய உள்ளத்தில் நன்மையில் ஒரு வால் கோதுமையின் அளவு இருந்தாலும் அவர் நரகத்தில் இருந்து வெளியேறுவார். லா இலாஹ இல்லல்லாஹ் கூறியவர் அவருடைய உள்ளத்தில் நன்மையில் ஒரு சிறு எறும்பின் அளவு இருந்தாலும் அவர் நரகத்தில் இருந்து வெளியேறுவார்.[24]

இந்த ஹதீஸில், ஈமானை ஏற்றத்தாழ்வு உள்ளதாக நபி ﷺ அவர்கள் ஆக்கியுள்ளார்கள்.

----

24. அறிவிப்பாளர்: அனஸ் ؓ, நூல்: புகாரி, எண்: 44

பாடம் 7

اَلْإِيمَانُ بِكُلِّ مَا أَخْبَرَ بِهِ الرَّسُولُ ﷺ

ரஸூல் ﷺ அறிவித்த செய்திகள் அனைத்தையும் நம்பிக்கை கொள்வது

நபி ﷺ அவர்கள் எதை எல்லாம் அறிவித்து, அவை ஸஹீஹான அறிவிப்பு தொடருடன் நமக்கு கிடைத்து இருந்தால் அவற்றை கண்டிப்பாக நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவை நமது கண்ணுக்கு புலப்படக் கூடியதாக இருந்தாலும் சரி, அல்லது இல்லை என்றாலும் சரி. அதை நாம் ஈமான் கொள்ள வேண்டும். அவை உண்மைதான் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நமது அறிவாற்றலால் நாம் புரிய முடிகின்ற விஷயமாக இருந்தாலும் சரி, அல்லது புரிய முடியாத விஷயமாக இருந்தாலும் சரி, அந்த செய்தியின் யதார்த்தத்தை நாம் எட்ட முடியாத ஒன்றாக இருந்தாலும் சரி நாம் அதை நம்பிக்கை கொண்டுதான் ஆக வேண்டும்.

உதாரணமாக, நபி ﷺ அவர்களுடைய இஸ்ரா மற்றும் மிஃராஜ் செய்திகள். இஸ்ராவும் மிஃராஜும் விழிப்பில், யதார்த்தமாக நடந்த நிகழ்வாகும். இது கனவில் கண்ட விஷயமாக இருந்திருந்தால் குறைஷிகள் இதை நடக்க முடியாத பெரிய விஷயமாக கருதி இருக்கவும் மாட்டார்கள், அதை மறுத்திருக்கவும் மாட்டார்கள். அவர்கள் கனவுகளை மறுப்பவர்களாக இருக்கவில்லையே!

மலக்குல் மவ்த் - உயிர்வாங்குகின்ற வானவர் மூஸா عليه السلام

DARUL HUDA | WhatsApp +919884469044
darulhuda.chennai@gmail.com

அவர்களிடம் அவர்களின் உயிரை எடுக்க வந்தபோது, அவரை கன்னத்தில் அறைந்து அவர் கண்ணை கழட்டி விட்டார்கள். அந்த வானவர் தனது இறைவனிடம் திரும்ப சென்று நடந்ததை விவரித்தார்.[25]

இந்த நபிமொழியும் மேற்கூறப்பட்ட வகையை சேர்ந்த ஹதீஸ் ஆகும். நமக்கு இதன் யதார்த்தத்தை விளங்க முடியவில்லை என்றாலும் நாம் இதை உண்மை எனவும் இவ்வாறே இந்த சம்பவம் நிகழ்ந்தது என்றும் நம்பிக்கை கொண்டுதான் ஆகவேண்டும்.

மேலும், தஜ்ஜால் வெளியேறி வருவது, ஈஸா இப்னு மர்யம் ﵇ இறங்குவது, அவர் அவனை கொல்வது, யஃஜூஜ், மஃஜூஜ் வெளியேறி வருவது, குறிப்பிட்ட மிருகம் வெளியேறி வருவது, சூரியன் மேற்கில் உதிப்பது, இன்னும் இவைப் போன்ற ஸஹீஹான ஹதீஸ்களில் வந்துள்ள அனைத்தையும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

கப்ர் - மண்ணறையில் நடைபெறும் இன்பம், துன்பம் பற்றி நபி ﷺ அவர்கள் கூறியது உண்மையாகும். தாமும் ஒவ்வொரு தொழுகையில் கப்ருடைய தண்டனையிலிருந்து பாதுகாப்பு தேடியதுடன் தனது உம்மத்துக்கும் அதை கட்டளையிட்டார்கள்.

கப்ரில் - மண்ணறையில் ஏற்படுகின்ற குழப்பம், தண்டனை, முன்கர், நகீர் வானவர்கள் கேள்வி கேட்பது, மரணத்திற்கு பின்னர் மறுமை நாளில் எழுப்பப்படுவது, இவை அனைத்தும் உண்மையாகும். இஸ்ராஃபீல் ﵇ இரண்டாவது முறை சூர் -எக்காளத்தில் ஊதும்போது மக்கள் எழுப்பப்படுவார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

---

25. அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா ؓ, நூல்: முஸ்லிம், எண்: 2372

وَنُفِخَ فِي الصُّورِ فَإِذَا هُمْ مِنَ الْأَجْدَاثِ إِلَىٰ رَبِّهِمْ يَنْسِلُونَ

(மறுமுறை) 'ஸூர்' ஊதப்பட்டால் உடனே அவர்கள் சமாதிகளிலிருந்து வெளிப்பட்டுத் தங்கள் இறைவனிடம் விரைவாக ஓடி வருவார்கள். (அல்குர்ஆன் 36 : 51)

மறுமை நாளில் மக்கள் ஆடையற்றவர்களாக, கத்னா செய்யப் படாதவர்களாக, காலணி இல்லாதவர்களாக எழுப்பப்படுவார்கள். மறுமை நாளின் மைதானத்தில் நிற்பார்கள். நமது நபி முஹம்மது ﷺஅவர்கள் அவர்களுக்காக சிபாரிசு செய்வார்கள். அல்லாஹு தபாரக வதஆலா அவர்களிடம் விசாரிப்பான். தராசுகள் கொண்டுவந்து நிறுத்தப்படும். மனிதனின் செயலேடுகள் விரித்து வைக்கப்படும். மனிதர்களின் செயல்கள் எழுதப்பட்ட ஏடுகள் (சிலருக்கு) வலது கைகளை நோக்கி, (இன்னும் சிலருக்கு) இடது கைகளை நோக்கி பறக்கும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

فَأَمَّا مَنْ أُوتِيَ كِتَابَهُ بِيَمِينِهِ ○ فَسَوْفَ يُحَاسَبُ حِسَابًا يَسِيرًا ○ وَيَنْقَلِبُ إِلَىٰ أَهْلِهِ مَسْرُورًا ○ وَأَمَّا مَنْ أُوتِيَ كِتَابَهُ وَرَاءَ ظَهْرِهِ ○ فَسَوْفَ يَدْعُو ثُبُورًا ○ وَيَصْلَىٰ سَعِيرًا ○

ஆகவே, (அந்நாளில்) எவருடைய வலது கையில் அவருடைய செயலேடு கொடுக்கப்படுகிறதோ, அவர் மிக்க இலகுவாகக் கேள்வி கணக்குக் கேட்கப்படுவார். அவர் மகிழ்ச்சி அடைந்தவராக(ச் சொர்க்கத்திலுள்ள) தன் குடும்பத்தார்களிடம் திரும்புவார். எவனுடைய செயலேடு அவனுடைய முதுகுப்புறம் கொடுக்கப்பட்டதோ, அவன், (தனக்குக்) கேடுதான் என்று (அப்படியே) சப்தமிடுவான், நரகத்தில் நுழைவான்.

(அல்குர்ஆன் 84 : 7-12)

மறுமையில் நன்மைகள் மற்றும் தீமைகள் நிறுக்கப்படுவதற்கு தராசு இருக்கும். அந்த தராசில் இரு தட்டுகள், ஒரு நாக்கு இருக்கும். அதில்தான் மனிதர்களின் அமல்கள் நிறுக்கப்படும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

فَمَنْ ثَقُلَتْ مَوَازِينُهُ فَأُولَئِكَ هُمُ الْمُفْلِحُونَ ○ وَمَنْ خَفَّتْ مَوَازِينُهُ فَأُولَئِكَ الَّذِينَ خَسِرُوا أَنْفُسَهُمْ فِي جَهَنَّمَ خَالِدُونَ ○

ஆகவே, எவர்களுடைய நன்மையின் எடைகள் கணக்கிறதோ அவர்கள்தான் வெற்றி அடைவார்கள். எவர்களுடைய (நன்மையின்) எடைகள் குறைகிறதோ அவர்கள் தமக்குத் தாமே நஷ்டத்தை உண்டுபண்ணிக் கொண்டு எந்நாளுமே நரகத்தில் தங்கிவிடுவார்கள். (அல்குர்ஆன் 23 : 102, 103)

நமது நபி முஹம்மது ﷺ அவர்களுக்கு மறுமையில் ஒரு நீர் தடாகம் இருக்கும். அதன் நீர் பாலைவிட வெண்மையாக இருக்கும். தேனைவிட இனிப்பாக இருக்கும். அதில் இருக்கும் குவளைகள் வானத்தின் நட்சத்திரங்களின் எண்ணிக்கை அளவிற்கு இருக்கும். யார் அதில் நீர் பருகுவாரோ அவர் அதற்கு பின்னர் தாகிக்கவே மாட்டார்.

(மறுமையில் நரகத்தின் மேல்) பாலம் அமைக்கப்படுவது உண்மையாகும். நல்லவர்கள் அதை கடந்து சென்று விடுவார்கள். பாவிகள் அதிலிருந்து சறுக்கி விழுந்து விடுவார்கள்.

தனது உம்மத்தில் பெரும் பாவம் செய்து நரகத்தில் நுழைந்தவர்கள் விஷயத்தில் நமது நபி ﷺ அவர்கள் சிபாரிசு செய்வார்கள். அந்த மக்கள் எரிந்து கரிகட்டைகளாக மாறிய பின்னர் நபி ﷺ அவர்களின் சிபாரிசினால் நரகத்தில் இருந்து

வெளியேறுவார்கள். நபி ﷺ அவர்களின் சிபாரிசால் அவர்கள் சொர்க்கம் செல்வார்கள்.

மற்ற நபிமார்கள், முஃமின்கள் - நம்பிக்கையாளர்கள், மலாயிகா - வானவர்களும் சிபாரிசு செய்வார்கள்.

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

وَلَا يَشْفَعُونَ إِلَّا لِمَنِ ارْتَضَىٰ وَهُمْ مِنْ خَشْيَتِهِ مُشْفِقُونَ

அவன் விரும்பியவர்களுக்கே தவிர மற்றெவருக்கும் இவர்கள் சிபாரிசு செய்யமாட்டார்கள். இன்னும், அவனுக்குப் பயந்து நடுங்கிக் கொண்டே இருப்பார்கள். (அல்குர்ஆன் 21 : 28)

மேலும், மறுமையில் சிபாரிசு செய்பவர்களின் சிபாரிசு காஃபிர்களுக்கு எந்த பலனையும் தராது.

சொர்க்கமும் நரகமும் படைக்கப்பட்டுள்ளன. அவை அழியாது. சொர்க்கம் அல்லாஹ்வின் நேசர்களின் தங்குமிடமாகும். நரகம் அல்லாஹ்வின் எதிரிகளுக்கு தண்டனையாக இருக்கும். சொர்க்க வாசிகள் சொர்க்கத்தில் நிரந்தரமாக தங்கி இருப்பார்கள். பாவிகளும் அப்படித்தான்.

அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

إِنَّ الْمُجْرِمِينَ فِي عَذَابِ جَهَنَّمَ خَالِدُونَ ۝
لَا يُفَتَّرُ عَنْهُمْ وَهُمْ فِيهِ مُبْلِسُونَ ۝

(ஆயினும் பாவம் செய்த) குற்றவாளிகள் நிச்சயமாக நரக வேதனையில் என்றென்றும் நிலைபெற்று விடுவார்கள். அவர்களுடைய (வேதனையில்) ஒரு சிறிதும் குறைக்கப்பட

மாட்டாது. அதில் அவர்கள் நம்பிக்கை இழந்து விடுவார்கள். (அல்குர்ஆன் 43 : 74, 75)

عَنْ أَبِي سَعِيدٍ الخُدْرِيِّ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ يُؤْتَى بِالْمَوْتِ كَهَيْئَةِ كَبْشٍ أَمْلَحَ فَيُنَادِي مُنَادٍ يَا أَهْلَ الجَنَّةِ فَيَشْرَئِبُّونَ وَيَنْظُرُونَ فَيَقُولُ هَلْ تَعْرِفُونَ هٰذَا فَيَقُولُونَ نَعَمْ هٰذَا المَوْتُ وَكُلُّهُمْ قَدْ رَآهُ ثُمَّ يُنَادِي يَا أَهْلَ النَّارِ فَيَشْرَئِبُّونَ وَيَنْظُرُونَ فَيَقُولُ وهَلْ تَعْرِفُونَ هٰذَا فَيَقُولُونَ نَعَمْ هٰذَا المَوْتُ وَكُلُّهُمْ قَدْ رَآهُ فَيُذْبَحُ ثُمَّ يَقُولُ يَا أَهْلَ الجَنَّةِ خُلُودٌ فَلاَ مَوْتَ وَيَا أَهْلَ النَّارِ خُلُودٌ فَلاَ مَوْتَ ثُمَّ قَرَأَ وَأَنْذِرْهُمْ يَوْمَ الْـحَسْرَةِ إِذْ قُضِيَ الأَمْرُ وَهُمْ فِي غَفْلَةٍ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: (மறுமை நாளில்) கருமை கலந்த வெண்ணிற ஆடு ஒன்றின் தோற்றத்தில் மரணம் கொண்டுவரப்படும். அப்போது அறிவிப்புச் செய்யும் (வானவர்களில்) ஒருவர், சொர்க்கவாசிகளே! என்று அழைப்பார். அவர்கள் தலையை உயர்த்திப் பார்ப்பார்கள். இதை (-இந்த ஆட்டை) நீங்கள் அறிவீர்களா? என்று அவர் கேட்பார். அவர்கள், ஆம்! இதுதான் மரணம் என்று பதிலளிப்பார்கள். அவர்கள் அனைவரும் அதை (முன்பே) பார்த்திருக்கிறார்கள். பிறகு, அவர் நரகவாசிகளை நோக்கி: நரகவாசிகளே! என்று அழைப்பார். அவர்கள் தலையை உயர்த்திப் பார்ப்பார்கள். அவர் இதை நீங்கள் அறிவீர்களா? என்று கேட்பார். அவர்கள், ஆம், இதான் மரணம் என்று பதில் சொல்வார்கள். அவர்கள் அனைவரும் அதை (முன்பே) பார்த்துள்ளனர். உடனே அது (-ஆட்டின் உருவத்திலுள்ள மரணம்) அறுக்கப்பட்டுவிடும்.

பிறகு அவர், சொர்க்கவாசிகளே! (உங்களுக்கு இனி) நிரந்தரமான வாழ்க்கை உண்டு; மரணமே இருக்காது. நரகவாசிகளே! (உங்களுக்கு இனி) நிரந்தரமான வாழ்க்கை உண்டு; மரணமே இருக்காது என்று கூறுவார்.

இந்த ஹதீஸை அறிவிக்கின்ற அபூ ஸயீத் அல்குத்ரீ ﵁ கூறினார்கள்:

நபி ﷺ அவர்கள் இவ்வாறு கூறிவிட்டு,

وَأَنْذِرْهُمْ يَوْمَ الحَسْرَةِ إِذْ قُضِيَ الأَمْرُ وَهُمْ فِي غَفْلَةٍ

என்ற வசனத்தை ஓதி காண்பித்தார்கள்.

பொருள்: (நபியே!) நியாயத் தீர்ப்பளிக்கப்படும் துக்கம் நிறைந்த அந்நாளைப் பற்றி நீங்கள் அவர்களை எச்சரியுங்கள்! எனினும், (இன்று உலக வாழ்வில்) இவர்கள் கவலையற்று இருக்கின்றனர். (அல்குர்ஆன் 19 : 39)[26]

----

26. அறிவிப்பாளர்: அபூ ஸயீத் அல்குத்ரீ ﵁ நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 4730

مُـحَمَّدٌ ﷺ خَاتَمُ النَّبِيِّينَ

முஹம்மது ﷺ நபிமார்களின் முத்திரை -இறுதி நபி ஆவார்கள்

அல்லாஹ் உடைய தூதர் முஹம்மது ﷺ அவர்கள் நபிமார்களின் முத்திரை ஆவார்கள். அதாவது, இறுதி நபியாக இருக்கின்றார்கள். மேலும், அவர்கள் ரஸூல்மார்களின் தலைவராகவும் இருக்கின்றார்கள்.

ஒருவர் முஹம்மது ﷺ அவர்களை ஈமான் கொள்ளவில்லையென்றால், அதாவது, முஹம்மது ﷺ அவர்கள் நபி என்பதற்கு சாட்சி கூறவில்லையென்றால் அவருடைய ஈமான் -இறைநம்பிக்கை சரியாகாது; ஏற்றுக்கொள்ளப் படாது.

நபி ﷺ அவர்களின் சிபாரிசுக்கு பிறகுதான் அடியார்களுக்கு மத்தியில் (மறுமையில்) தீர்ப்பளிக்கப்படும். நபி ﷺ அவர்களின் உம்மத் சொர்க்கத்தில் நுழையாமல் வேறு எந்த ஒரு உம்மத்தும் சொர்க்கத்தில் நுழைய முடியாது.

நபி ﷺ அவர்களுக்கு லிவாவுல் ஹம்த் என்ற கொடி கொடுக்கப்படும்.

அல்மகாமுல் மஹ்மூத் என்ற உயர்ந்த தகுதி அவர்களுக்கு வழங்கப்படும்.

எல்லோரும் நீர் பருக வருகின்ற மாபெரும் நீர் தடாகம் அவர்களுக்கு உண்டு.

DARUL HUDA | WhatsApp +919884469044
darulhuda.chennai@gmail.com

அவர்கள்தான் எல்லா நபிமார்களுக்கும் இமாமாகவும் அவர்களின் பிரசங்கியாகவும் இருப்பார்கள். இன்னும் அவர்கள் எல்லோருக்கும் நபி ﷺ அவர்கள்தான் சிபாரிசு செய்வார்கள்.

பாடம் ௯

وَصَحَابَةُالنَّبِيِّ ﷺ

நபியின் தோழர்கள்

நபி ﷺ அவர்களின் உம்மத்துதான் எல்லா உம்மத்துகளில் மிக சிறந்தவர்கள் ஆவார்கள்.[27]

நபி ﷺ அவர்களின் தோழர்கள் எல்லா நபிமார்களின் தோழர்களில் மிகவும் சிறந்தவர்கள் ஆவார்கள்.

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ كُنَّا نُخَيِّرُ بَيْنَ النَّاسِ فِي زَمَنِ النَّبِيِّ ﷺ فَنُخَيِّرُ أَبَا بَكْرٍ ثُمَّ عُمَرَ بْنَ الخَطَّابِ ثُمَّ عُثْمَانَ بْنَ عَفَّانَ رَضِيَ اللَّهُ عَنْهُمْ

நபி ﷺ அவர்களின் காலத்தில் மக்களுக்கு மத்தியில் சிறப்பானவர் யார் என்று நாங்கள் பேசிக் கொள்வோம். அப்போது முதலாவதாக அபூ பக்ரையும் பிறகு உமர் இப்னு கத்தாபையும் பிறகு உஸ்மான் இப்னு அஃப்பானையும் சிறப்பானவர்கள் என்று நாங்கள் கூறுவோம். இவர்கள் அனைவரையும் அல்லாஹ் பொருந்தி கொள்வானாக![28]

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ كُنَّا نَتَحَدَّثُ عَلَىٰ عَهْدِ رَسُولِ اللهِ ﷺ أَنَّ خَيْرَ

---

27. كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ (நம்பிக்கையாளர்களே!) நீங்கள்தான், மனிதர்களில் தோன்றிய வகுப்பார்களிலெல்லாம் மிக்க மேன்மையானவர்கள். (அல்குர்ஆன் 3 : 110)
28. அறிவிப்பாளர்: இப்னு உமர் ؓ, ஸஹீஹுல் புகாரி, எண்: 3655.

هٰذِهِ الْأُمَّةِ بَعْدَ نَبِيِّهَا أَبُو بَكْرٍ ثُمَّ عُمَرُ ثُمَّ عُثْمَانُ فَيَبْلُغُ ذٰلِكَ النَّبِيَّ ﷺ فَلَا يُنْكِرُهُ

அப்துல்லாஹ் இப்னு உமர் ؓ கூறுகின்றார்கள்: நபி ﷺ அவர்களுடைய காலத்தில் நாங்கள் பேசிக் கொள்வோம், இந்த உம்மத்தில் நபிக்கு பின்னர் மிக சிறப்பானவர் அபூ பக்ர் ؓ ஆவார். பிறகு உமர் ؓ, பிறகு உஸ்மான் ؓ ஆவார்கள். இந்த செய்தி நபி ﷺ அவர்களுக்கு எட்டும். நபியவர்கள் அதை மறுக்க மாட்டார்கள்.[29]

عَنْ أَبِي جُحَيْفَةَ ؓ قَالَ قَالَ عَلِيٌّ ؓ خَيْرُ هٰذِهِ الْأُمَّةِ بَعْدَ نَبِيِّهَا أَبُو بَكْرٍ ؓ وَبَعْدَ أَبِي بَكْرٍ عُمَرُ ؓ وَلَوْ شِئْتُ أَخْبَرْتُكُمْ بِالثَّالِثِ لَفَعَلْتُ

அலி ؓ அவர்கள் கூறினார்கள்: இந்த உம்மத்தில் அதன் நபிக்கு பின்னர் சிறந்தவர் அபூ பக்ர் ؓ, பிறகு உமர் ؓ ஆவார்கள். நான் மூன்றாவது நபரையும் உங்களுக்கு அறிவிக்க விரும்பி இருந்தால் அதைச் செய்து இருப்பேன்.[30]

---

29. அறிவிப்பாளர்: இப்னு உமர் ؓ, அஸ்ஸுன்னா - இப்னு அபீ ஆஸிம், எண்: 1193.
30. அறிவிப்பாளர்: அபூ ஜுஹைஃபா ؓ, நூல்: அஹ்மது, எண்: 835.

அபூ ஜுஹைஃபா: இவரின் பெயர் வஹப் இப்னு அப்துல்லாஹ் இப்னு முஸ்லிம். நபியவர்கள் மரணிக்கும்போது பருவ வயதை எட்டாத சிறுவராக இருந்தார். கூஃபா நகரத்தில் ஹிஜ்ரி 74ல் இறப்பெய்தினார். கலீஃபா அலி உடைய காவல் துறை மற்றும் பைத்துல்மால் அதிகாரியாக இருந்தார்.

குறிப்பு: இதன் அறிவிப்பாளர்களில் ஷரீக் என்பவர் இடம் பெறுகிறார். இவர் ஞாபக சக்தியில் பலவீனமானவராக இருந்தாலும் வேறு அறிவிப்பாளர்கள் வாயிலாக இந்த கருத்துடைய பல ஸஹீஹான அறிவிப்புகள் இருப்பதால் இந்த ஹதீஸும் ஸஹீஹாக எடுத்துக் கொள்ளப்படும் என்று ஹதீஸ் கலை வல்லுநர் ஷுஐப் அர்னாவூத் கூறியிருக்கிறார்கள்.

நபி ﷺ அவர்கள் இறந்த பின்னர் கிலாஃபத் - ஆட்சிக்கு அவர்கள்தான் மிகத் தகுதி உள்ளவர்களாக இருந்தார்கள். காரணம், அவர்களின் சிறப்புகளும் அவர்கள் முந்தி இஸ்லாமை ஏற்றதும் ஆகும். தனது வாழ்நாளில் மற்ற எல்லா தோழர்களைப் பார்க்கிலும் அபூ பக்ரைத்தான் நபி ﷺ அவர்கள் தொழுகை நடத்துவதற்கு முற்படுத்தினார்கள். நபி ﷺ அவர்களின் மரணத்திற்கு பின்னர் எல்லா நபித்தோழர்களும் அபூ பக்ரைத்தான் ஒரு மனதோடு முன்னிலைப்படுத்தி அவர்களுக்கு ஆட்சிக்கான பைஅத் - வாக்குப் பிரமாணம் செய்து கொடுத்தார்கள். கண்டிப்பாக ஒரு வழிகேடான செயலில் நபித்தோழர்கள் ஒன்று சேர அல்லாஹ் விட்டுவிட மாட்டான்.

அபூ பக்ர் رضي الله عنه அவர்களுக்குப் பிறகு ஆட்சிக்கு தகுதியாக இருந்தவர் உமர் رضي الله عنه அவர்கள் ஆவார். அவர்தான் அபூ பக்ருக்கு அடுத்து மிகவும் சிறப்பு பெற்றவராக இருந்ததுடன் அபூ பக்ர் رضي الله عنه அவர்கள் உமரிடம்தான் கிலாஃபத்தின் பொறுப்பை ஒப்படைத்தார்கள்.

உமர் رضي الله عنه அவர்களுக்குப் பின்னர் உஸ்மான் رضي الله عنه ஆட்சிக்கு தகுதியானவராக இருந்தார். உமர் رضي الله عنه அவர்கள் நியமித்த மூத்த நபித்தோழர்களின் ஆலோசனை சபை, உஸ்மான் رضي الله عنه அவர்களைத்தான் ஆட்சி பொறுப்புக்கு தேர்ந்தெடுத்தார்கள்.

அதற்கு பிறகு, அலி رضي الله عنه ஆட்சிக்கு தகுதியானவராக இருந்தார். காரணம், அலி رضي الله عنه அவர்களுக்கு இருந்த சிறப்புகளும் அவர்களின் காலத்தில் வாழ்ந்த தோழர்கள் இது விஷயத்தில் ஒருமித்த கருத்துள்ளவர்களாகவும் இருந்தார்கள்.

நல்வழி பெற்ற நேர்வழி நடந்த இந்த கலீஃபாக்கள் பற்றித்தான் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ رواه ابن ماجة

நீங்கள் எனது சுன்னாவை பற்றிப் பிடியுங்கள்! எனக்குப் பின்னால் நல்வழி பெற்ற நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் சுன்னாவைப் பற்றிப் பிடியுங்கள்! அவற்றை கடவாய்ப் பற்களால் கவ்விப் பிடியுங்கள்![31]

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: எனக்குப் பின்னால் கிலாஃபத் முப்பது ஆண்டுகள் இருக்கும்.

عَنْ سَفِينَةَ رضي الله عنه قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ خِلَافَةُ النُّبُوَّةِ ثَلَاثُونَ سَنَةً ثُمَّ يُؤْتِي اللهُ الْمُلْكَ مَنْ يَشَاءُ رواه أبو داود

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நபித்துவத்தின் அடிப்படையில் அமைகின்ற கிலாஃபத் -ஆட்சி (எனக்குப் பின்னால்) முப்பது ஆண்டுகள் இருக்கும். பிறகு, அல்லாஹ் அரசாட்சியை தான் நாடியவருக்கு கொடுப்பான்.[32]

கிலாஃபத்தின் இறுதியாக அலி رضي الله عنه அவர்களின் ஆட்சி அமைந்திருந்தது.

பத்து தோழர்களுக்கு நபி ﷺ அவர்கள் சாட்சி கூறியதைப் போன்று நாமும் சொர்க்கத்தைக் கொண்டு சாட்சி கூறுவோம்.

عَنْ عَبْدِ الرَّحْمٰنِ بْنِ عَوْفٍ رضي الله عنه قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ أَبُو بَكْرٍ فِي الْجَنَّةِ وَعُمَرُ فِي الْجَنَّةِ وَعُثْمَانُ فِي الْجَنَّةِ وَعَلِيٌّ فِي الْجَنَّةِ وَطَلْحَةُ فِي

31. அறிவிப்பாளர்: இர்பாழ் இப்னு சாரியா رضي الله عنه, நூல்: இப்னு மாஜா, எண்: 42
32. அறிவிப்பாளர்: சஃபீனா رضي الله عنه. நூல்: அபூ தாவூத், எண்: 4647

الجَنَّةِ وَالزُّبَيْرُ فِي الجَنَّةِ وَعَبْدُ الرَّحْمَنِ بْنُ عَوْفٍ فِي الجَنَّةِ وَسَعْدٌ فِي الجَنَّةِ وَسَعِيدٌ فِي الجَنَّةِ وَأَبُو عُبَيْدَةَ بْنُ الجَرَّاحِ فِي الجَنَّةِ رواه الترمذي

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அபூ பக்ர் ؓ சொர்க்கத்தில் இருப்பார். உமர் ؓ சொர்க்கத்தில் இருப்பார். உஸ்மான் ؓ சொர்க்கத்தில் இருப்பார். அலி ؓ சொர்க்கத்தில் இருப்பார். தல்ஹா ؓ சொர்க்கத்தில் இருப்பார். ஸுபைர் ؓ சொர்க்கத்தில் இருப்பார். ஸஃது ؓ சொர்க்கத்தில் இருப்பார். ஸஈது ؓ சொர்க்கத்தில் இருப்பார். அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப் ؓ சொர்க்கத்தில் இருப்பார். அபூ உபைதா ؓ சொர்க்கத்தில் இருப்பார்.[33]

நபி ﷺ அவர்கள் யாருக்கெல்லாம் சொர்க்கத்தைக் கொண்டு சாட்சி கூறினார்களோ நாமும் அவர்களுக்கு சொர்க்கத்தைக் கொண்டு நற்செய்தி கூறுவோம்.

ஹஸன் இன்னும் ஹுஸைன் ؓ அவர்கள் சொர்க்கத்து வாலிபர்களின் தலைவர்கள் ஆவார்கள்.

ஸாபித் இப்னு கைஸ் ؓ அவர்களை நோக்கி நபி ﷺ அவர்கள் அவர் சொர்க்க வாசிகளில் ஒருவர் ஆவார் என்று கூறினார்கள்.

நபி ﷺ அவர்கள் உறுதியாக கூறாமல் நாம் யாருக்கும் சொர்க்கம் அல்லது நரகம் கிடைக்கும் என்று உறுதியாக கூறமாட்டோம். மாறாக, நல்லவர்களுக்கு சொர்க்கத்தை ஆதரவு வைப்போம். பாவிகளுக்கு நரகத்தை பயப்படுவோம்.

அஹ்லுல் கிப்லா - நமது கிப்லாவை ஏற்றுக்கொண்ட, அதை முன்னோக்கி தொழுகின்ற யாரையும் அவர் பாவம் செய்துவிட்டால் அதன் காரணமாக அவரை காஃபிர் என்று கூற

---

33. அறிவிப்பாளர்: அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ؓ, நூல்: திர்மிதி, எண்: 3747

மாட்டோம். அவர் ஏதும் ஒரு குற்ற செயலை செய்துவிடுவதால் அவரை இஸ்லாமில் இருந்து வெளியேற்றிவிட மாட்டோம்.

நாம் கருதுவதாவது: மன்னர் நல்லவராக இருந்தாலும் அல்லது கெட்டவராக இருந்தாலும் அவருடன் சேர்ந்து ஹஜ்ஜுக்கும் ஜிஹாதுக்கும் செல்ல வேண்டும். அவருக்கு பின்னால் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுவது கூடும்.

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் தோழர்களை அரவணைப்பதும், அவர்களை நேசிப்பதும் அவர்கள் மீது அன்பு வைப்பதும் அவர்களின் சிறப்புகளை நினைவு கூர்வதும் அவர்கள் மீது அல்லாஹ்வின் கருணை இறங்க துஆ கேட்பதும், அவர்களுக்காக பாவமன்னிப்பு கேட்பதும் அவர்களின் குறைகளை கூறாமல் இருப்பதும் அவர்களின் சிறப்புகளை நம்பிக்கை கொள்வதும் அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்திற்காக செய்த தியாகங்களை அறிவதும் அவர்கள்தான் இந்த உம்மத்தின் முந்திய முதல் தலைமுறை என்பதை ஏற்பதும் ஸுன்னா -நபிவழியை சேர்ந்ததாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَالَّذِينَ جَاءُوا مِنْ بَعْدِهِمْ يَقُولُونَ رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِإِخْوَانِنَا الَّذِينَ سَبَقُونَا بِالْإِيمَانِ وَلَا تَجْعَلْ فِي قُلُوبِنَا غِلًّا لِلَّذِينَ آمَنُوا

எவர்கள் இவர்களுக்குப் பின் வந்தார்களோ அவர்கள் அல்லாஹ்விடம் கூறுவார்கள்: எங்கள் இறைவனே! எங்களையும் நீ மன்னித்தருள்! எங்களுக்கு முன் நம்பிக்கை கொண்ட எங்கள் (முஹாஜிர், அன்சாரி) சகோதரர்களையும் மன்னித்தருள்! அந்த நம்பிக்கை கொண்டவர்களைப் பற்றி எங்கள் உள்ளங்களில் குரோதங்களை உண்டு பண்ணாதே! (அல்குர்ஆன் 59 : 10)

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

مُحَمَّدٌ رَسُولُ اللهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ رُحَمَاءُ بَيْنَهُمْ

முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வுடைய திருத்தூதராவார்கள். (அவரும்) அவருடன் இருப்பவர்களும் நிராகரிப்பவர்கள் விஷயத்தில் கண்டிப்பானவர்களாகவும், தங்களுக்குள் மிக்க அன்புடையவர்களாகவும் இருப்பார்கள்.

(அல்குர்ஆன் 48 : 29)

عَنْ أَبِي سَعِيدٍ الخُدْرِيِّ ﵁ قَالَ قَالَ النَّبِيُّ ﷺ لاَ تَسُبُّوا أَصْحَابِي فَلَوْ أَنَّ أَحَدَكُمْ أَنْفَقَ مِثْلَ أُحُدٍ ذَهَبًا مَا بَلَغَ مُدَّ أَحَدِهِمْ وَلاَ نَصِيفَهُ رواه البخاري

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: எனது தோழர்களை ஏசாதீர்கள் உங்களில் ஒருவர் உஹுது மலையளவு தங்கத்தை தர்மம் செய்தாலும் அவர்களில் ஒருவர் ஒரு கையளவு அல்லது அதன் பாதியளவு தர்மம் செய்ததைக் கூட (அந்தளவு நன்மையைக் கூட) அடைய முடியாது.[34]

நபி ﷺ அவர்களின் மனைவிமார்கள் நமது தாய்மார்கள் ஆவார்கள், அவர்கள் பரிசுத்தமானவர்கள், எல்லா தீய விஷயங்களை விட்டும் முற்றிலும் நீங்கியவர்கள் ஆவார்கள். அவர்களுக்காக அல்லாஹ்வின் பொருத்தம் வேண்டி ரழியல்லாஹு அன்ஹா என்று துஆ கேட்பது ஸுன்னாவில் அடங்கிய ஓர் அமலாகும்.

அவர்களில் மிக சிறப்பானவர் கதீஜா பின்த் குவைலித் ﵂,

34. அறிவிப்பாளர்: அபூ சயீது குத்ரி ﵁, நூல்: புகாரி, எண்: 3673

இன்னும் ஆயிஷா அஸ்ஸித்தீகா பின்த் அஸ்ஸித்தீக் ﵄ ஆவார்கள். ஆயிஷா ﵄ அவர்களை அல்லாஹ் தனது வேதத்தில் புகழ்ந்து அவர்கள் குற்றமற்றவர்கள் என்று கூறுகின்றான். இம்மையிலும் மறுமையிலும் அவர்கள் நபியவர்களின் மனைவியாக இருப்பார்கள். எந்த குற்றத்தை விட்டு ஆயிஷா ﵄ அவர்கள் நீங்கியவர்கள் என்று அல்லாஹ் கூறிவிட்டானோ அந்த குற்றத்தைக் கொண்டு யார் ஆயிஷா ﵄ அவர்கள் மீது பழிப் போடுவாரோ அவர் மகத்தான அல்லாஹ்வை நிராகரித்து விட்டார்.

முஆவியா ﵁ அவர்கள் முஃமின்களுக்கு தாய்மாமன் ஆவார்கள்; அல்லாஹ்வின் வஹ்யை எழுதிய தோழர்களில் ஒருவராவார்கள். மேலும் முஸ்லிம்களின் கலீஃபாக்களில் ஒருவராகவும் இருக்கின்றார்கள்.

طَاعَةُ أُولِي الْأَمْرِ

ஆட்சியாளர்களுக்கு கீழ்ப்படிதல்

முஸ்லிம் மன்னர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிந்து அவர்களின் கட்டளைகளை ஏற்று நடப்பது ஸுன்னா ஆகும். அவர்கள் நல்லவர்களாக இருந்தாலும் சரி, அல்லது பாவிகளாக இருந்தாலும் சரி. ஆனால், அவர்கள் பாவத்தை நமக்கு ஏவாமல் இருக்க வேண்டும். அப்படி ஒருகால் அவர்கள் நம்மை பாவத்திற்கு தூண்டினால் நாம் அவர்களுக்கு கீழ்ப்படிய முடியாது. அல்லாஹ்விற்கு மாறு செய்கின்ற விஷயத்தில் யாருக்கும் கீழ்ப்படிதல் இல்லை.

யார் ஆட்சிபொறுப்பை ஏற்றுக்கொண்டாரோ, மக்களும் ஒருமித்து அவரை பொருந்திக் கொண்டார்களோ அவர் கலீஃபாவாக அமீராக ஆகிவிடுவார். அல்லது தனது படை பலத்தால் மக்களை அடக்கி கட்டுக்குள் கொண்டுவந்து விட்டால் அவரும் கலீபா, அமீர் ஆக ஆகிவிடுவார். அவரை அமீருல் முஃமினீன் என்று அழைக்கப்படும். அவருக்கு கீழ்ப்படிந்து கட்டுப்பட்டு நடப்பது வாஜிப் -அவசியமாகும். அவரை எதிர்ப்பது, அவருக்கு மாறு செய்வது, முஸ்லிம்களின் ஆட்சியில் பிளவு உண்டுபண்ணுவது ஹராம் - தடுக்கப்பட்டதாகும்.

அனாச்சாரமான, புதுமையான கருத்துக்களை கூறுபவர்கள்,

புதுமையான செயல்களை செய்பவர்களை விட்டு விலகி இருப்பது, அவர்களை விட்டு ஒதுங்கி இருப்பது சுன்னாவாகும். மார்க்க விஷயங்களில் குதர்க்கம் செய்வது சண்டை சச்சரவுகள் செய்வது, வாக்குவாதம் செய்வது கூடாது. அவற்றை விட்டுவிட வேண்டும்.

அத்தகைய பித்ஆவாதிகள் எழுதிய புத்தகங்களை படிப்பதையும் அவர்களின் உரைகளை கேட்பதையும் விட்டுவிட வேண்டும். மார்க்கத்தில் நுழைக்கப்பட்ட ஒவ்வொரு புதுமையும் அனாச்சாரம்தான்.

இஸ்லாம் இன்னும் ஸுன்னா அல்லாத ஒன்றை தனக்கு அடையாளமாக, பெயராக யார் ஆக்கிக் கொள்வார்களோ அவர்கள் எல்லோரும் பித்அத்வாதிகள்தான். உதாரணமாக, ராஃபிழா, ஜஹ்மிய்யா, கதரிய்யா, கவாரிஜ், முர்ஜிஆ, முஃதஸிலா, கராமிய்யா, கிலாபிய்யா, இன்னும் இவர்களைப் போன்றவர்கள்.

இவர்கள் எல்லோரும் வழிகெட்ட பிரிவினர்கள், அனாச்சாரக் குழுக்கள் ஆவார்கள். அல்லாஹ் இவர்களிடமிருந்து நம்மை பாதுகாப்பானாக!

மார்க்கத்தின் உட்பிரிவு விஷயங்களில் ஒரு இமாமை மட்டும் பின்பற்றுவது பழிப்பிற்குரிய விஷயமல்ல. உதாரணமாக, நான்கு இமாம்களை பின்பற்றுகின்ற மக்களைப் போன்று. ஆகவே, மார்க்கத்தின் உட்பிரிவு விஷயங்களில் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது ஓர் அருளாகும். இதில் மாறுபட்ட கருத்துடையவர்கள் தங்கள் கருத்து வேறுபாட்டில் போற்றப்படுபவர்கள் ஆவார்கள். அவர்களின் ஆராய்ச்சிக்கு அவர்களுக்கு கூலி உண்டு. அவர்களின் கருத்து வேற்றுமை விசாலமான ஓர் அருளாகும். அவர்கள் ஒரு விஷயத்தில் ஒருமித்து இருப்பது உறுதியான ஆதாரமாக இருக்கும்.

அல்லாஹ்விடம் அவனது கருணையாலும் அருளாலும் நாம் யாசிக்கின்றோம்: அல்லாஹ் நம்மை பித்அத் -அனாச்சாரத்திலிருந்தும் ஃபித்னா -குழப்பத்திலிருந்தும் பாதுகாப்பானாக! இஸ்லாமின் மீதும் ஸுன்னாவின் மீதும் நம்மை வாழவைப்பானாக! இவ்வுலகில் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களை பின்பற்றியவர்களில் நம்மை ஆக்குவானாக! மரணத்திற்கு பின்னர் அவர்களின் கூட்டத்தில் நம்மை எழுப்புவானாக! ஆமீன்!

கொள்கை குறித்து நாம் கூறவந்த விஷயங்களின் இறுதி இதுதான்.

அல்ஹம்து லில்லாஹ் - அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். நமது தலைவர் முஹம்மது மீதும் அவர்களின் கிளையார்கள் மற்றும் தோழர்கள் மீதும் அல்லாஹ்வின் ஸலவாத்தும் ஸலாமும் நிலவட்டும்.

மிகவும் நேர்த்தியான முறையில் அச்சடிக்கப்பட்ட குர்ஆன் பிரதிகள் மற்றும் ஆதாரப்பூர்வமான தரமிக்க இஸ்லாமிய நூல்கள்.

INDIAN BANK | DARUL HUDA | A/C No: **6724227449**,
IFS Code: IDIB000M016, Branch: Mannady

அல்குர்ஆன்

3. அல்குர்ஆன் அரபி (Executive Hard bound, Paper 40gsm, Size 14x21cm)
4. அல்குர்ஆன் அரபி (Executive Hard bound, Paper 60gsm, Size 18x24cm)

அல்குர்ஆன் தமிழாக்கங்கள்

1. தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃபில் பயான் (Hard Bound 48 gsm)
2. தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃபில் பயான் (Hard Bound 60 gsm)
3. புகழ்மிகு குர்ஆன் போற்றத்தகு தமிழாக்கம் (Hard Bound)
4. மகத்துவமிகு குர்ஆன் மாண்புமிகு தமிழாக்கம் (Hard Bound)
5. தெளிவுமிகு குர்ஆன் தெவிட்டாத தமிழாக்கம் (HB 28 gsm, 18x12cm)
6. மேன்மைமிகு குர்ஆன் எளிமைமிகு தமிழாக்கம்
7. இறைவேதம் அல்குர்ஆன் தமிழாக்கம் (Soft Bound)
8. சங்கைமிகு குர்ஆன் சிறப்புமிகு தமிழாக்கம் (Hard bound)
9. கண்ணியமிகு குர்ஆன் இனிமைமிகு தமிழாக்கம் (Soft Bound)
10. உயர்வுமிகு குர்ஆன் உன்னத தமிழாக்கம் (Hard Bound 28 gsm)
11. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் - பாகம் 1
    (அல் பாதிஹா (01) முதல் அத் தவ்பா (9) வரை)
12. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் - பாகம் 2
    (சூரா யூனுஸ் (10) முதல் அல் அன்கபூத் (29) வரை)

DARUL HUDA | WhatsApp +919884469044
darulhuda.chennai@gmail.com

13. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் பாகம் 3
(சூரா அர்ரூம் (30) முதல் அந்நாஸ் (114) வரை)

14. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (அம்ம ஜுஸ்வு)

15. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (ஆலு இம்ரான்)

தமிழ் புத்தகங்கள்

1. தொழுகை முறை
2. நோன்பு
3. ஹிஜாப் - முஸ்லிம் மங்கையரின் மேன்மை
4. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கொள்கைகள்
5. அழைப்புப்பணி - அழைப்பாளர்
6. திருமண வாழ்த்து, காலை மாலை திக்ருகள், இஸ்திகாரா துஆ
7. ஸகாத் - வழிமுறைகள், சட்டதிட்டங்கள்
8. இறுதிப் பேருரை (முழுத் தொகுப்பு)
9. இஸ்லாமியக் கொள்கை. வினா - விடைகள்
10. தடுக்கப்பட்டவை
11. இறைநெறி கூறும் இயற்கைக் கடமைகள்
12. அல்குர்ஆன் துஆக்கள்
13. குர்ஆன் ஹதீஸ் கூறும் பிரார்த்தனை
14. நம்பிக்கையின் அடிப்படைகள்
15. இல்லங்களை அச்சுறுத்தும் அபாயங்கள்
16. இஸ்லாமிய ஒளியில் குழந்தை வளர்ப்பு
17. மூன்று அடிப்படைகள்
18. அலட்சியமாகக் கருதப்படும் ஆபத்தான குற்றங்கள்
19. தஃலீமுல் குர்ஆன் (தஜ்வீது வழிகாட்டி)
20. அத்தவ்ஹீத்
21. அன்றாடம் கடைப்பிடிக்க 1000 சுன்னத்துகள்
22. வெற்றிக்கு வழி
23. அழைப்புப் பணி கேள்வி-பதில்
24. உம்ரா வழிகாட்டி (ஆர்ட் பேப்பர் 18x12 cm)
25. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (10.5x14 cm)
26. முன்மாதிரி முஸ்லிம் குடும்பம்
27. இயற்கை மதம்
28. ஹிஸ்னுல் முஸ்லிம் (மஸ்னூன் துஆக்கள்)
29. இஸ்லாமின் இறைக்கோட்பாடு
30. மீளாப்பயணம் (ஜனாஸாவின் சட்டங்கள்)
31. இப்னு தைமிய்யா வாழ்க்கை வரலாறு

32. முன்மாதிரி முஸ்லிம்
33. ஹிஸ்னுல் முஸ்லிம் (21x14 cm)
34. ஹஜ். உம்ரா வழிகாட்டி
35. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (21x14 cm Single Colour)
36. தப்சீர் முதல் ஜுஸ்வு
37. முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி
38. அர்ரஹீக் அல்மக்தூம் (18x24 cm)
39. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (14x21 cm Full Colour)
40. இறைமார்க்கம் இறைவேதம் ஓர் அறிமுகம்
41. இஸ்லாம் நீங்கள் அறியவேண்டிய மார்க்கம்
42. சான்றோர்கள் பாடசாலை (பாகம் 1)
43. இறைவனுக்கு உருவம் கொடுக்க முடியுமா?
44. கவலைப்படாதே!
45. இயேசுவின் அழைப்பு
46. ஒரு தெய்வமா? பல தெய்வமா?
47. வஸிய்யத்தீ
48. ரஹ்மத்தான ரமழான்
49. இஸ்லாமிய சிறப்பு கல்வி வகுப்பு
50. உலக முடிவு
51. இறைத்தூதரின் தூய வரலாறு
52. அல்குர்ஆன் பாக்கியம் நிறைந்த வேதம்
53. தூய திருகலிமா
54. அத்தஹாரா - தூய்மை - ஃபிக்ஹ்
55. தொழுகை - ஃபிக்ஹ்
56. ஸகாத் - ஃபிக்ஹ்
57. ஹஜ் - ஃபிக்ஹ்
58. நோன்பு - ஃபிக்ஹ்
59. இல்முத் தஜ்வீத்
60. இஸ்லாமில் சொத்துரிமை சட்டங்கள்
61. நபியவர்களின் சரியான தொழுகை முறை
62. முஸ்லிம் பெண்மனியின் நற்குணங்கள்
63. நேரான பாதைக்கு வழிகாட்டும் வெளிச்சமிக்க நம்பிக்கைகள்
64. ஹதீஸ் கலை இமாம்களின் கொள்கை
65. ஷர்ஹுஸ் ஸுன்னா - பர்பஹாரி
66. உஸூலுஸ் ஸுன்னா - அஹமது இப்னு ஹன்பல்
67. அல் அகீததுல் வாஸிதிய்யா - இப்னு தைமிய்யா
68. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கொள்கை - உஸைமீன்
69. அல்குர்ஆன் விரிவுரையின் சில அடிப்படைகள் - உஸைமீன்

ENGLISH BOOKS

1. The Ideal Husband & The Ideal Wife
2. 33 Ways Developing Inner Fear
3. 40 Guidelines & Dangers That Threaten
4. Situations & Questions - Answers
5. Prohibited & Problems And Solutions
6. Aqeeda Attawheed
7. The True Message of Jesus Christ
8. Fortification of The Muslim
9. Funeral Rites In Islaam
10. Explanation of Aayat Alkursi
11. Gateway To Arabic, Starter Book, (1-5 Parts) each book
12. Search for Happiness
13. What Must Be Known About Islaam?
14. The Sunnah Out Spread Flags of...
15. The Book of Tawheed
16. The Ideal Muslim
17. Ideal Muslimah
18. Noble Quran in The English Language
19. Arraheeq Al Makhtoom
20. About Islam
21. Glorious Quran
22. Precious Invocations and Ruqyas (21x14 cm)
23. Dua and Ruqya from Quran and Sunnah (10.5x14 cm)
24. The Quran with English Meanings and Notes
25. English Meanings and Notes of The Quran

DARUL HUDA | WhatsApp +919884469044
darulhuda.chennai@gmail.com

திறமைமிக்க மார்க்க அறிஞர்கள் தொகுத்த சட்ட நூல்கள்



எல்லோரும் அறிய வேண்டிய மார்க்க சட்டங்கள்.

சரியான ஆதாரங்கள்.

எளிய நடை.

இல்லங்கள், மஸ்ஜிகள் மற்றும் மத்ரஸாக்களில் இருக்கவேண்டிய தொகுப்பு.

அல்ஹம்து லில்லாஹ்! படியுங்கள்! பரப்புங்கள்!!

BOOK SIZE: H 21.5 X W 15 CM | 70 GSM PAPER | 5 VOLUMES | 668 PAGES | 44 CHAPTERS

DARUL HUDA
QUALITY ISLAMIC BOOK PUBLISHER
211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-1.
Phone : +91-44-25247866, | darulhuda.chennai@gmail.com
Mobile : +91-98401 74121 | www.darulhuda.net

DH-TML 2063